உ
குருபாதம்

# ஞானசம்பந்தம்

தருமையாதீனத் திங்கள் இதழ்

மலர் 27 ] பிலவங்க - மார்கழி - 10—1—68 [ இதழ் 2

திருச்சிற்றம்பலம்

பொன்றயங் கிலங்கொளிர் நலங்குளிர்ந்த புன்சடை
பின்றயங்க ஆடுவாய்! பிஞ்ஞகா! பிறப்பிலீ ;
கொன்றையம் முடியினுய்! கூடலால வாயிலாய்!
நின்றயங்கி யாடலே நினைப்பதே நியமமே. (சம்பந்தர்)

திருச்சிற்றம்பலம்

## கூத்தன்றன் கூத்து

சித்தாந்த நூல்களுள் ஒன்ருகிய 'இருவருட் பயன்' என்னும் நூலில் உமாபதி சிவாசாரியார் இறைவனது திருவருளைப் பற்றிக் கூறுமிடத்தில் ஓர் அழகிய குறள் வெண்பாவை அருளிச்செய்துள்ளார்.

"தரையை உணராது தாமே திரிவார்
புரைய உணரா புவி"

என்பது அக் குறள்வெண்பா. 'மக்கள் முதலிய அனைத்துயிர்களையும், மற்றும் எல்லாப் பொருள்களையும் தாங்கிநிற்பது நிலம் - பூமி. நிலம் இவ்வாறு எல்லாவற்றையும் தாங்கிக்

கொண்டு, தான் அசைவின்றி நிற்பதனுல்தான், உயிர்கள் பலவும், ஓடி ஆடித் திரிந்து எல்லாச் செயல்களையும் செய்து வாழ்கின்றன. ஆயினும், அவை தம்மை நிலந்தான் தாங்கி நிற்கின்றது என்பதை அறிவதில்லை ஏனை உயிர்கள் என்ன, ஆறறிவுடைய மக்களே அதை நினைப்பதில்லை. அதுபோலத் தான் எல்லாப் பொருள்களும் தோன்றல், நிற்றல், அழிதல் யாவும் இறைவனுலே நடைபெறுகின்றன என்பதை உயிர்கள் உணர்வதில்லை' என்பது இக்குறள் வெண்பாவின் பொருள்.

இங்ஙனம் எல்லாவற்றையும் செய்கின்ற இறைவனது செயல், அவனது 'திருவிளையாட்டு' என்று சொல்லப்படும். விளையாட்டை, 'கூத்து' எனக் கூறுதல் உண்டு. நடனக்கலை ஓர் இன்ப விளையாட்டே என்பது யாவரும் அறிந்தது. இறைவனது திருவிளையாட்டு அவனது திருக்கூத்தேயாகின்றது. எல்லாவற்றையும் ஆக்கியும், காத்தும், அழித்தும் விளையாடுகின்ற கூத்தைச் செய்கின்ற இறைவன் கூத்தனேயாகின்றுன். அதற்கேற்ப அவன் கூத்தாடுதலாகிய நடனத் தொழிலையும் செய்கின்றுன். அக்கூத்து ஐந்தொழிற்கூத்து - பஞ்சகிருத்திய நடனமாகும். நற் றில்லைச் சிற்றம்பலத்தே தீயாடுங்-கூத்தன், இவ் வானும் குவலயமும் எல்லோமும் - காத்தும் படைத்தும் கரந்தும் விளையாடி '' என்பது திருவாசகம்.

அவனன்றி ஓர் அணுவும் அசையாது ஆகையால், அனைத்தும், ஆடுவதற்கு அவன் ஆடும் பெருமானுக நின்று ஆடுகின்ருன். அவனது ஆட்டம் நின்ருல் அனைத்தும் நின்றுவிடும். அதனுல், அவன் ஓய்வின்றி ஆடிக்கொண்டேயிருக்கின்ருன். ஐந்தொழில் நடனத்தைப் புரிந்துகொண்டேயிருக்கின்ருன்; அதுபற்றி அவன், 'கூத்தன், கூத்தப்பெருமான், நடராசன்' என்றெல்லாம் சொல்லப்படுகின்ருன்.

இறைவன் உயிர்களின்பொருட்டு ஐந்தொழில் செய்யும் அருள்நிலையை அவனது நடனக்கோலமே இனிது விளக்குகின்றது. அதனுல், அந்நடனத்தைத் தரிசித்தோர் அவனது அருள்நிலையில் மூழ்கி, ஆனந்த நிலையைப் பெறுகின்றனர். ஆகவே, கூத்தப் பெருமானது கூத்தினைத் தரிசித்தலே மக்கள் உடம்பை எடுத்ததன் பயனுகின்றது.

" அத்தாஉன் ஆடல்காண்பான் அடியனேன் வந்தவாறே "
" ... ... ... ...தில்லை யம்பலத்துக்
கூத்தனுக் காட்பட் டிருப்பதன் றோநந்தம்
கூழைமையே "

என்பன முதலாக வரும் அருள்வாக்குக்கள் ஆய்ந்துணரத் தக்கன.

கூத்தப் பெருமானது திருக்கூத்து ஐந்தொழிலையும் காட்டுவதாயினும், அதனது முடிந்த பயன், ஆன்மாக்களைப் பாசத்தினின்றும் எடுத்துத் தனது திருவடிப் பேரின்பத்தில் அழுந்தச் செய்வதாகும்.

" மாயை தனைஉதறி, வல்வினையைச் சுட்டு, மலம்
சாய அமுக்கி, அருள் தான்எடுத்து, — நேயமுடன்
ஆனந்த வாரிதியில் ஆன்மாவைத் தான்அழுத்தல்
தான்எந்தை யார்பரதந் தான் "

என்ற உண்மை விளக்க வெண்பா இதனை நன்கு வலியுறுத்துகின்றது.

கூத்தப்பெருமானது கூத்து ஆனந்தக்கூத்து என்பதை மாணிக்கவாசகர் தில்லையை அடைந்து தரிசித்தபொழுது அனுபவமாகப் பெற்று,

" குறியொன்றும் இல்லாத கூத்தன்தன் கூத்தைஎனக்கு
அறியும்வண்ணம் அருளியவாறு ஆர்பெறுவார்
அச்சோவே "

என அதிசயித்துப் பாடியருளினர்.

கூத்தப் பெருமானுக்கு உரிய முதல் தலமாகிய தில்லை, காண முத்திதரும் தலமாய் விளங்குவதும் இதனாலேயாகும், பாசமெனும் தாழ் உருவி உய்யும் நெறிகாட்டுவிக்கும் திருநடனத்தைத் தரிசித்தற்கு உரிய சிறப்புநாள் மார்கழித் திருவாதிரை நாளே என்பது உலகம் அறிந்தது. அத் திருநாளும் இப்பொழுதேயாய் இருப்பது அன்பர் அனைவர்க்கும் அகமகிழ்ச்சியைத் தருவது. 'கூடுங் கதி ஒருகால் கும்பிட்டாற்† போதும்' என்றும், 'திருவாதிரைக் ஒருவாக் களி' என்றும் நம் முன்னோர் கூறி மகிழ்ந்தவாறு, நாமும் ஆதிரை நாளில் ஆடுங் கழலை வணங்கி ஆனந்தத்தில் திளைப்போமாக.

†சிதம்பர மும்மணிக்கோவை - 30.

## ஞாலம் அளந்த தமிழ் :

உலகில் தோற்றம் அறியப்படாத தொன்மையுடைய மொழி, தமிழ் மொழியே. இஃது இலக்கண வரம்பைப் பெற்றுத் திருந்திச் செந்தமிழாகிய காலமே அறியப்படவில்லை என்றால், இதன் தோற்றத்தை அறிதல் எங்ஙனம் இயலும்!

தமிழ்மொழியில் இன்றுள்ள மிகப்பழைய நூல் தொல்காப்பியம். இதன் காலத்தை மிகக் குறைத்துக் கணக்கிடுகின்றவர்களும், இரண்டாயிரத்தைந்நூறாண்டுகளுக்குப் பிற்பட்டதாகச் சொல்லவில்லை. உண்மையில் இந்நூலின் காலம், மேற்குறித்த ஆண்டெல்லைக்கு முற்பட்டதே. தொல்காப்பியம் ஓர் இலக்கண நூல். இலக்கணநூல் இலக்கியங்களை அடிநிலையாகக் கொண்டே ஆக்கப்படுவது. அவ்வகையில் தொல்காப்பியத்திற்கு அடிநிலையாய் நின்ற இலக்கியங்கள் இப்பொழுது காணப்படாமலே மறைந்துபோயின. இதற்குக் காரணங்கள் பல இருக்கலாம். அது நிற்க.

'தொல்காப்பியம் தமிழில் தோன்றிய முதல் இலக்கண நூல்அன்று; அதற்கு முன்பே பல இலக்கணநூல்கள் இருக்க, அவைகளைத் தழுவியே தொல்காப்பியர் நூல்செய்தார்' என்பது தமிழ் அறிந்த அனைவரும் நன்கு உணர்ந்ததொன்று. தொல்காப்பியத்திற்கு முதலாய் இருந்த இலக்கியங்களே காணப்படவில்லை என்றால், அதற்கு முற்பட்ட இலக்கணங்களுக்கு முதலாய் இருந்த இலக்கியங்களை நாம் காண்பது எங்கே! இங்ஙனம் செவ்விய இலக்கணங்களுக்கு இலக்கியமாய் அமைந்த நூல்களின் எல்லையே அறியப்படவில்லை என்றால், தமிழ் தோன்றித் திருந்தா மொழியாய் வழங்கியிருந்த காலத்தை அறிதல் கூடுமோ! ஆகவே, தமிழ்மொழியின் தொன்மை எத்தகையது என்பது அறியலாகும்.

இத் தமிழ்மொழியின் பெருமையைத் தமிழ்ப் பெரியார் பலர் பலவாறு எடுத்துக்காட்டியுள்ளார்கள். அவற்றுள் தலைசிறந்த ஒன்று, சேக்கிழார் குறித்த "ஞாலம் அளந்த மேன்மைத் தெய்வத் தமிழ்" என்பது.* இதில் 'தமிழ்மொழி இவ்வுலக முழுவதையும் அளந்து கண்ட மேன்மையுடையது' என்றும்,

---

* மூர்த்தி நாயனார் புராணம் - 3.

உ

குருபாதம்

குருவருள்

# வள்ளுவரும் வாதவூரரும்

சைவ சமயாசாரியர் நால்வருள் மாணிக்கவாசகர், தேவாரம் அருளிச்செய்த மூவருக்குப் பின்வந்தவர் என இக்கால ஆராய்ச்சி யாளர் சிலர் கூறினும், 'சமயாசாரியர் நால்வருள் காலத்தால் முற்பட்டவர் மாணிக்கவாசகர்' என்பதே மரபு, இம்மரபினை மாற்றிக்கொள்வதற்குக் கூறப்படும் சான்றுகள் ஐயத்திற்கு இடம் தராதனவாய் இருக்கவில்லை. அன்றியும் மேற்கூறிய மரபினை நிலைநிறுத்தும் வகையில் பேரறிஞர் பலர் காட்டும் சான்றுகளும் இல்லாமல் இல்லை. நிலைமை இங்ஙனம் இருக்கும் பொழுது, முன்னை மரபின்வழி நிற்பதே முறையாகும். இந் நிலையில் காலத்தால் மிக முற்பட்டவராகிய மாணிக்கவாசகர் வாக்கில் திருவள்ளுவரது திருக்குறளின் தொடர்கள் அருகியே காணப்படுகின்றன. ஆயினும், திருக்குறட் கருத்துக்கள் ஆங் காங்குக் காணப்படுகின்றன. அங்ஙனம் வள்ளுவரது குறள் வாதவூரராகிய மாணிக்கவாசகர் வாக்கில் எங்ஙனம் காணப்படு கின்றது என்பதை ஒருசிறிது நோக்குதல் பொருந்தும்.

திருவள்ளுவர், "கற்றதனு லாய பயனென்கொல் வாலறி வன் - நற்றாள் தொழாஅரெனின்" என்ற திருக்குறளிலும், "கற்றீண்டு மெய்ப்பொருள் கண்டார் தலைப்படுவர் - மற்றீண்டு வாரா நெறி" என்ற திருக்குறளிலும், 'கல்வியைக் கற்றவர்க்கே கடவுளை உணரும் நிலை உண்டாகும் என்பதைக் குறிக்கின்றார். கடவுளை உணரும் உணர்வே, 'மெய்யுணர்வு அல்லது ஞானம்' எனப்படுகின்றது. அந்த ஞானம் முதலில் நூல்களின் வழி யாகவே ஒருவர்க்கு உண்டாகும். அவ்வாறு நூல்களின் வழியாக உண்டாகும் ஞானம், 'கலை ஞானம்' எனப்படும். கலைஞானம் இல்லாமல் அனுபவ ஞானம் உண்டாகாது. ஆகவே, அனுபவ ஞானத்திற்கு அடிப்படை கலைஞானமாகின் றது. கலைஞானத்தையே அடையாத ஒருவர், அனுபவ ஞானத்தை எவ்வாறு அடையமுடியும்? முடியாது. அதனால் தான் திருவள்ளுவர் கல்வியைப் பெரிதும் வற்புறுத்துகின்றார்.

அதுபோலவே. மாணிக்கவாசகரும் அநுபவ ஞானத்திற்குக் கலைஞானம் இன்றியமையாதது என்பதை,

"கற்றறியேன் கலைஞானம், கசிந்துருகேன்"[1] என்று அருளிச்செய்கின்றார். இறைவனது பெருமைகளைக் கூறும் கலைஞானத்தைப் பெருமையால் அவனை நினைந்து கசிந்துருகும் நிலைவரவில்லை என்பது இதன் கருத்து.

ஒருவன், தான் கல்வியைக் கற்காவிடினும், கற்றவர்களை அணுகியிருந்தேனும் அவரால் நல்லவற்றைக் கேட்டு அறிதல் வேண்டும் என்பதை, "கற்றில னாயினும் கேட்க; அஃது ஒருவற்கு - ஒற்கத்தின் ஊற்றாந் துணை" என்பதனால் தெரிவிக்கின்றார் வள்ளுவர். வாதவூரடிகளும் "எண்ணிலேன்திரு நாமஅஞ் செழுத்தும்என் ஏழைமை அதனாலே" என்று கூறியபின்,

"நண்ணி லேன்கலை ஞானிகள் தம்மொடும்"[2]

என்று அருளிச்செய்கின்றார்.

"தனக்குவமை யில்லாதான்" என்று வள்ளுவர் இறைவனைக் குறிக்கும் தொடர் வாதவூரர் வாக்கில்,

"தனையொப் பாரை இல்லாத் தனியை"[3]

எனக் காணப்படுகின்றது. சிவத்திற்கும், அவனது சத்திக்கும் வேற்றுமை இன்மையால் மாணிக்கவாசகர் அம்மையையும் திருக்கோவையாருள்,

"தன்னே டுவமையிலாதவள்" (51)

எனக் குறிக்கின்றார்.

வாதவூரடிகள் சிவபெருமானை, "செம்பொருட் டுணிவே"[4]

---

[1] திருஏசறவு - 5.

[2] அதிசயப் பத்து - 6.

[3] புணர்ச்சிப் பத்து - 7.

[4] பிடித்த பத்து - 1

என அழைப்பது, திருவள்ளுவர் இறைவனை, "செம்பொருள்" * எனக் குறித்திருத்தலை நினைப்பிக்கும்.

'உலகப் பற்றுக்கள் முற்றிலும் நீங்குவதற்கு இறைவனைப் பற்ற வேண்டும்' என்பதையும், அதற்குக் காரணம் அவன் இயல்பாகவே எந்தப் பற்றும் இல்லாதவனாய் இருப்பதுதான் என்பதையும் திருவள்ளுவர், "பற்றுக பற்றற்றான் பற்றினை அப்பற்றைப் - பற்றுக பற்று விடற்கு" என்பதனால் அறிவுறுத்துகின்றார். 'பற்றுக்கள் விடுதற்கு இறைவனைப் பற்றுக, என்றதனால், 'அவனை அடைவதும் பற்றற்றவர்கட்கே கூடும்' என்பது தெளிவாகும். அதனால் மாணிக்கவாசகர் இறைவனை,

"பற்றொன் றிலார்பற்றும் தில்லைப்பரன்"

எனத் தமது திருக்கோவையாரில் (178) அருளிச்செய்தார். மற்றும் திருவாசகத்தில்,

"சுற்றிய சுற்றத் தொடர்வறுப்பான் தொல்புகழே
பற்றியிப் பாசத்தைப் பற்றறநாம் பற்றுவான்
பற்றியபே ரானந்தம் பாடுதுங்காண் அம்மானாய்" ‡

என்றபகுதியும் மேற்குறித்த திருக்குறளோடு ஒத்துநிற்கின்றது.

"பிறவிப் பெருங்கடல் நீந்துவர் நீந்தார் - இறைவனடி சேராதார்" என்னும் திருக்குறளில் திருவள்ளுவர் பிறவியை, 'பெருங்கடல்' என்றும், 'அதைக் கடத்தற்கு உதவும் புணை இறைவனது திருவடியே' என்றும் கூறுகின்றார். அதனையே,

"பிறவி என்னும்இக் கடலை நீந்தத்தன்
பேரருள் தந் தருளினான்"

என்ற மணிவாசகரது திருவாசகத்தில் காண்கின்றோம். 'இறைவன் அடி' என்பது, அவனது அருளையே குறிக்கும் என்பது நன்கறியப்பட்டது.

---

* "பிறப்பென்னும் பேதமை நீங்கச் சிறப்பென்னும்
செம்பொருள் காண்ப தறிவு" திருக்குறள் - 358.

‡ திருஅம்மானை - 20.

பிறவியைக் கடலாக உருவகித்துக் கூறுகின்ற மற்றோர் இடத்தில் அதனை இன்னும் மிக விரிந்த அளவில் மாணிக்க வாசகர் முற்றுருவமாகச் சித்தரித்துக் காட்டுகின்றார்.

பிறவி ஒரு பெருங்கடல். பிறவியில் ஒன்றன்பின் ஒன்றாக இடைவிடாது வருகின்ற துன்பங்கள், அக்கடலில் இடைவிடாது வருகின்ற அலைகள். மாதரது அழகிய உருவத் தோற்றம் அக்கடலின் நடுவில் எழும் புயற்காற்று. காமம் அக்கடலில் வாழும் சுறாமீன். இவற்றினின்றும் பிழைத்துக் கரையேறுதல் எப்படி? திருவைந்தெழுத்தாகிய புணையைப்பற்றி னலன்றி அஃது இயலாது. அப்புணையைத் தாம் பற்றிக்கிடப்ப தாகவும் அதனால் அவர் இறைவன் திருவடியாகிய அளவறியப் படாத கரையை அடைந்ததாகவும் அருளிச் செய்கின்றார்.

தனியனேன் பெரும்பிறவிப் பௌவத் தெவ்வத்
　　தடந்திரையால் எற்றுண்டு பற்றொன் றின்றிக்
கனியைநேர் துவர்வாயா ரென்னுங் காலாற்
　　கலக்குண்டு காமவான் சுறவின் வாய்ப்பட்டு
இனியென்னே உய்யுமாறு என்றென் றெண்ணி
　　அஞ்செழுத்தின் புணைபிடித்துக் கிடக்கின் றேனை
முனைவனே முதல்அந்தம் இல்லா மல்லற்
　　கரைகாட்டி ஆட்கொண்டாய் மூர்க்க னேற்கே.

வள்ளுவர் காமத்துப்பாலில் தலைவன், தலைவியது குறிப்பை அறியுமிடத்து, அவளது நோக்கு ஒன்றே இருதன்மையாய் இருந்தது என்பதைக் கூறுமிடத்து, ஒருதன்மை நோயாகவும், மற்றொரு தன்மை அதற்கு மருந்தாகவும் இருந்தது எனக் கூறு வதாக ஓர் அழகிய குறளை அமைத்துள்ளார். அது,

"இருநோக் கிவள்உண்கண் உள்ளது ; ஒருநோக்கு
நோய்நோக்கொன் றந்நோய் மருந்து."

என்பது. வாதவூரரும் தமது திருக்கோவையாரில் அத்துறை வரும்இடத்தில் அங்ஙனமே கூறுதல் காணலாம்.

அணியும் அமிழ்தும்என் ஆவியும் ஆயவன் தில்லைச்சிந்தா
மணிஉம்ப ரார்அறியாமறை யோன்அடி வாழ்த்தலரில்

பிணியும் அதற்கு மருந்தும் பிறழப் பிறழமின்னும்
பணியும் புரைமருங் குற்பெருந்தோளி படைக்கண்களே.

திருவள்ளுவர் ஒப்புரவாளனை ஊருணி என்கின்றார். அஃதாவது ஒப்புரவாளனது செல்வம் ஊருணியில் உள்ள நீர் பலர்க்கும் பயன்படுதல்போல எல்லார்க்கும் பயன்படும் எனக் குறிக்கின்றார். அங்ஙனமே மாணிக்கவாசகரும் திருக்கோவையாரில், 'தலைவன் பலர்க்கும் பயன்படுபவன்' என்பதைக் குறிக்குமிடத்தில் அவனை, '**ஊருணி**' எனக் கூறுகின்றார்.

"காரணி கற்பகம் கற்றவர் நற்றுணை பாணரொக்கல்
சீரணி சிந்தா மணிஅணி தில்லைச் சிவனடிக்குத்
தாரணி கொன்றையன் தக்கோர்தம் சங்கநிதிவிதிசேர்
ஊருணி உற்றவர்க் கூரன்மற் றியாவர்க்கும் ஊதியமே"

என்பது அப்பாட்டு.

இங்ஙனம் வள்ளுவரது வாக்கோடு வாதவூரடிகளது வாக்கினையும் யாவரும் ஒருங்கு உணர்ந்து பயன்பெறுவார்களாக.

---

## EXTRACT FROM THE VISITORS' BOOK

Dharmapuram Adhinam

Sri Sattanathaswamy Devasthanam, Sirkazhi.

We had the good fortune to have dharsan at this famous shrine. The temple takes you to lofty, heights, and gives you all the strength to fight poet forces. It is kept in a resplendent clean way.

(Sd.) C. S. Ramachandran, I. C. S.
Adviser, Planning Commission,
New Delhi.

22—11—67.

I went round the temple, and worshipped in all places. Found everything in order. The temple is kept neat and clean.

(Sd.) R. Krishnasamy,
Advocate, Madras.

24—11—67.

# தையல்நாயகி அந்தாதி

[ மூலமும் உரையும் ]

உரை ;- தருமையாதீனப்புலவர், பண்டித, வித்துவான்,

## திரு. இராம. கோவிந்தசாமிப் பிள்ளை

[மலர் 26 இதழ் 9 பக்கம் 524ன் தொடர்ச்சி]

தரணி தானம் நடுக்குறத் தீமைசெய் தானவனுங்
காரணி யங்க மகிடனைக் காய்ந்தநற் காரணியே!
காரணி கண்ட னுயிரேயென் றீமையைக் காய்கடுக்கைத்
தாரணி பூரணி வேளூர்த் தயிலம்மை தற்பரையே! (89)

(இ - ள்) தாரணி தானம் நடுக்கு உற-மண்ணுலகத்தவரும் (மக்களும்) தேவரும் நடுக்கத்தினையடைய, தீமைசெய் தானவன் ஆம் - கொடிய செயலைப்புரிந்த அசுரனாகிய, கார் அணி அங்கம் மகிடனை-கருமை நிறம் வாய்ந்த உறுப்புக்களையுடைய எருமைக் கிடாய் முகத்தினனை காய்நல் காரணி ஏ - துர்க்கா பரமேசுவரி யாகிக் கொன்றொழித்த உமாதேவியே! கார் அணி கண்டன் உயிர் ஏ - நீல நிறம் பொருந்திய அழகிய கழுத்தினையுடைய பரமேசுரன்றன் உயிரானவளே! கடுக்கைதார் அணி பூரணி- கொன்றை மலர்மாலையினையணிந்த நிறைபரம் பொருளான வளே! வேளூர் தயிலம்மை யாகிய, தற்பரை ஏ - சிவசத்தியே! என் தீமையைக் காய் - அடியவன்றன் பிறவிக்குக்காரணமாகிய தீவினைகளை முற்றவும் ஒழித்தருளுக. (எ - று.)

(கு - ரை) தானம் - விண்ணுலகு. தானவன் - அசுரன். கார் எருமைக் கிடாயின் தலையின்கண் உள்ள மயிர்எனவும் ஆம். மகிடம் - எருமை. காரணி கண்டன் - நீலகண்டன். கடுக்கை - பொருளாகு பெயர்.

தற்பர னெந்தை யெழிற்சாமி நாதன் றனதிடத்தார்
கற்பக மேவிய வேளூர்த் தயிலம்மை கற்பகமே
பற்பக லாகத் திருவடிச் சீரைப் பகர்ந்து நின்றேன்
அற்பமு நீயிரங் காயிரும் போவுன் னகமன்னையே. (90)

(இ - ள்) தற்பரன் எந்தை எழில் சாமிநாதன் தனது இடத்து ஆர் கற்பகம் மேவிய - சிவபெருமானாகிய எந்தையும் அழகிய திருமுருகப் பெருமானும் ஆகியவர்தம் இடத்தின்கண் நிறைந்த தென்னைமரங்கள் பொருந்திய, வேளூர் தயிலம்மை

கற்பகமே - தைலம்மையாகிய கற்பகம் போன்றவளே, அன்னையே, தாயே; பல்பகல் ஆக திரு அடி சீரை பகர்ந்து நின்றேன்-பல காலமாகத் தேவரீருடைய சிறப்புக்களையே எடுத்துத் துதித்துக்கொண்டுள்ளேன். நீ அற்பமும் இரங்காய். தேவரீர் சிறிதும் திருவுள்ளம் இரங்கியருளவில்லை, உன் அகம் இரும்பு ஓ - தேவரீருடைய திருவுள்ளம் இரும்பாகிய கடினத் தன்மையா ? இளகியருள்புரிக. (எ - று).

(கு - ரை) தற்பரனும் எந்தை அழகிய சாமிநாதனும் ஆகிய இறைவன் என்றும், பொருள் கோடறகும், கற்பகம் - ஐந்து தருக்களின் ஒன்று. கற்பகம் - தென்னை. அல்பம் (அற்பம்) சிறிது ; வடசொல். பகர்தல் - இடையீடின்றியியம்பல்.

அகந்தை மிகுந்த படிறனென் றேவெனை யாதரியா (து)
இகழ்ந்து விடுத லழகல்ல காணீ ரெழுவுலகு
மகந்தவிர்த் தாக்கி யருள்புரி வாயென் னரிலொழித்தே
யுகந்தழைத் தீந்தருள் வேளூர்த் தயிலம்மை யோதினனே. (91)

(இ - ள்) வேளூர் தயிலம்மை ஏ - தேவரீர், அகந்தை மிகுந்த படிறன் என்று ஓ என்னை ஆதரியாது - நான் எனும் முனைப்பு அதிகமாகவுடைய பொய்யன் என்று கருதியோ அடியவனை விரும்பிப் பற்றாது, இகழ்ந்து - அவமதிசெய்தி, விடுதல் நீக்குதல், அழகு அல்ல காண் - அழகு ஆகமாட்டாது. ஈர் எழு உலகும் - பதினான்கு உலகத்துள்ளாருடைய, அகம்-பாவச் செயல்கள். தவிர்த்து - நீக்கி, ஆக்கி-மேன்மைப்படுத்தி, அருள் புரிவாய் - கருணையருளுவாய், அங்ஙனமிருப்ப, என் அரில் ஒழித்து - தமியேன் செய்த குற்றங்களைப் போக்கி, உகந்து - விரும்பி, (மகிழ்ந்து) அழைத்து-கூப்பிட்டு. அழைத்துக்கொண்டு ஈந்தருள் – பேரின்பினைக் கொடுத்தருள்க. ஓதினன் - இடையீடின்றிக் கூறிக்கொண்டுள்ளேன். (எ - று.)

(கு - ரை.) படிறு - பொய்மனம். காண் - முன்னிலையசைச் சொல். அகம்-பாவம். ஆக்கி-புனிதமுடை_த்தாக்கி (உயர்த்தி). அரில் - குற்றம், உகந்து - விரும்பி, ஓதுதல் - இடையீடின்றியியம்பல்.

ஓதினன் பற்பல சந்தவின் பத்தொடு முன்னதப்பாக்
காதின னும்பிறப் புன்முலைப் பாலுண்டு காழிவந்தோன்
கோதின னேனுந் திருவரு டந்திடக் கொள்கையுடன்
வாதினன் வேளூர்த் தயிலம்மை யேயுனை வந்தித்தனே. (92)

(இ - ள்) காழிவந்தோன் ஆம் பிறப்பு உன்முலைப்பால் உண்டு - சீகாழிப்பதியில் திருஅவதாரம் செய்தருளிய திருஞான சம்பந்தப் பெருமானார் தக்கதோற்றத்தோடு எழுந்தருளிவந்த

தேவரீருடைய திருமுலைப்பாலாகிய சிவஞான அமுதினையருந்தி காதினன் - இனியமொழியுரைப்பவராய் பற்பல சந்தம் இன்பத் தொடும் உன்னதப்பா ஓதினன் - பலவகையான சந்தங்கள் (பண்ணும் இராகமும்) கூடிய இனிமையுடன் கூட உயர்ந்த திரு அருட்பாகளை திருவாய் மலர்ந்தருளினர். கோதினன் - குற்றமுடையவன். ஏனும் - எனினும் (ஆயினும்) அருள்புரிந் தனை. வேளூர் தயிலம்மையே, உனை வந்தித்தன் ஏ - உன்னை யேவழிபாடு புரிகின்றேன். திருஅருள் தந்திட - திருவருள் தந் தருளுமாறு, வாதிக்கின்றேன். தவபரமே தண்ணருள்புரிக என்பதாம். (எ - று)

(கு - ரை) திருஞானசம்பந்தர் சமணர்களைக் கழுவேற்றிய ஞான்று அரசனைத் தடுக்காதிருந்தமையே குற்றமெனக் கூறி னர். கோதினன் வாதித்தல் - மேற்கோள் காட்டி தருக்கித்து வேண்டல். திருவருள்தரல் என்பது அம்மையப்பராக வெழுந் தருளிப் பிறவாநெறியளித்தருளல். ஏகாரம் அசைநிலை. (எ - று)

வந்தியளித்த மகன்போல மூங்கை வசனித்தல்போன்
மந்தன் முழுமகன் கற்றோ ரியல்பை மதித்துணரேன்
வந்தவா சொற்களைச் சேர்த்துன் திருப்புகழ் வைத்துரைத்தேன்
கந்த மலர்க்குழல் வேளூர்த் தயிலம்மை காத்தருளே. (93)

(இ - ள்) வந்தி அளித்த மகன்போல - மலடிபெற்ற புதல் வனைப் போலவும், மூங்கை வசனித்தல் போல் - ஊமையானவன் இயம்பல் போலவும் (உடைய). மந்தன் முழுமகன் - மந்த மதி யினனாகிய பெருமூடன், கற்றுஓர் இயல்பை மதித்து உணரேன் - பயக்கும் உண்மை நூல்களை ஆராய்ந்துக் நன்கு மதித்து கொள் உயிர்க்குறுதிளாதவன் ஆகிய ஏழையோன், வந்த ஆ(று) சொற்களைசேர்த்து - வாய்க்குவந்தபடியாகிய பொருளில் புன் மொழிகளை ஒருசேரவைத்து. உரைத்தேன் - செய்யுளிற் சேர்த்துக் கூறியுள்ளேன், கந்தம் மலர்குழல் வேளூர் தயிலம்மை - நறுமணம் கமழும் பூக்களையணிந்த கூந்தலினையுடைய வைத்தீசுரன் திருக் கோயிலில் எழுந்தருளியுள்ள தையல்நாயகித்தாயே! காத்து அருள் - காத்தருளுவீராக.

(கு - ரை) வந்தியளித்த மகன் என்பதும், மூங்கை வசனித் தல் - என்பதும் இல்பொருள் உவமை. வந்தி - மலடி. மலடி பிள்ளைபெறல் கூடாமையின் இல்பொருளாயிற்று. மூங்கை - ஊமை (செவிட்டுமென்). மூங்கை மொழிதல் யாண்டும் இன்மை யின் அன்னதாம். மந்தன் - கூறுவனவற்றை யேற்றுக்கொள் ளும் அறிவில்லாதவன். முழுமகன் - யாதுமறியாத மூடன்.

(தொடரும்)

உ

குருபாதம்

தருமை ஆதீனம் 25-ஆவது குருமகாசந்நிதானம்

# ஸ்ரீலஸ்ரீ கயிலை சுப்பிரமணிய தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் அவர்கள்

சென்னை மாநகரில் நடைபெற்ற

## இரண்டாவது

# உலகத் தமிழ் மாநாட்டின்

விழா நிறைவில் வழங்கியருளிய

## வாழ்த்துரை

" ஞாலம் நின்புக ழேமிக வேண்டும்தென்
ஆல வாயில் உறையும்எம் ஆதியே "

இருபதாம் நூற்றாண்டின் பிற்பகுதி, என்றுமுள தென் தமிழின் ஏற்றமிகு காலம். உலகமெலாம் தமிழ் முழங்க, உலகத் தமிழர் அனைவரும் ஒன்று கூடி, தமிழகத்தின் தலைநகரில் ஒரு மாபெரும் விழாவினைக் கொண்டாடி மகிழ்கிறோம். இதனைத் தமிழ் பயிலும் அனைவரும் அவரவர் சொந்த விழாவாகவே கருதி, ஆக்கம் நாடி, ஊக்கம் காட்டித் தமிழக அரசுடன் ஒத்துழைக் கின்றனர். இது பெருமகிழ்ச்சிக்கு உரிய நிகழ்ச்சி ஆகும்.

இவ்விழா சென்ற பத்து நாட்களாகப் பார்பரவும் ஊர்வல மும், திருத்த மிகு கருத்தரங்கும், கவின் மிக்க கலையரங்கும், புவி போற்றும் கவியரங்கும், திசை புகழும் இசையரங்கும், விலைமிக்க கலைக்காட்சியுமாக நடந்தேறித் தமிழக வரலாற்றில் சிறப்பிடம் பெற்றுவிட்டது.

அமிழ்தினும் இனிய 'நம் தமிழ்மொழிப் பாவையை இற் றைக்கு ஈராயிரம் ஆண்டுகட்கு முன்பிருந்தே தவநெறிச் சான்றோர்களும் அருள்நெறிச் செல்வர்களும், வழிவழியாக

இறைநெறிப் பாலூட்டி, அறநெறி வழி காட்டி, நீதி நெறி நடை பயிற்றி, அன்பு நெறிப் பண்பூட்டி, இயற்கையெழில் அழகூட்டி, காவியக் கலையுடுத்தி, பாவியற் பணி புனைந்து, பேரின்ப முடி சூட்டி வளர்த்து வந்துள்ளனர்.

நாம் அனைவரும் அத்தமிழ்ப் பெருமாட்டியின் குழந்தைகளே யாவோம். நம்மில் ஒவ்வொருவருக்கும் தமிழன் என்ற பெயர் சூட்டிய பெருமை அப்பர் அடிகளையே சாரும். இவ்வினிய தமிழ் மரபில் நானூறு ஆண்டுகட்கு மேலாகத் தமிழ்த் தொண்டும், சமயத் தொண்டும். சிவப் பணியும் தவப் பணியும் ஒல்லும் வகையெலாம் ஓவாதே இயற்றி வருவது நமது தருமை யாதீனம்.

உலகிற்கோர் பொதுமறையாம் திருக்குறளை உரைவளத்துடன் உலகினுக்கு உவந்தளித்தது நமது ஆதீனம். இவ்வுலகத் தமிழ் மாநாட்டின் பெரும்பயனாகத் திருக்குறள் ஆய்விற்குத் தமிழக அரசு முதலிடம் கொடுத்துப் பெரு நிதி யளித்து ஊக்கம் காட்டியிருப்பது பாராட்டிற்குரிய செயல். இச்செயல், வீதிகள் தோறும் தமிழ் மணமும், வீடுகள்தோறும் குறள் மணமும் பரவச் செய்யப் பெருந்துணை புரியும். இப்பெரும் மாநாடு சிறந்த முறையில் வெற்றிகரமாக நிகழ முன்னின்று நடாத்திய நமது மதிப்பிற்குரிய தமிழக முதலமைச்சரும், பேரறிஞருமாகிய திருவாளர் அண்ணாதுரை யவர்கள் முயற்சி அனைத்து வகையாலும் பாராட்டத்தக்கதாகும். உடனுறை அமைச்சர்களும், விழாக் குழுவினரும் எடுத்துக்கொண்ட முயற்சிகளைப் பெரிதும் பாராட்டுகிறோம். இவ்வன்பர்கட்கு எல்லா நலமும் பெருகச் செந்தமிழ்ச் சொக்கர் திருவருளைச் சிந்தித்து வாழ்த்துகிறோம்.

வளர்க தமிழ்! வாழ்க உலகெலாம்!!

## வாழ்த்து

வான்முகில்வழாது பெய்க மலிவளம் சுரக்க மன்னன்
கோல்முறை அரசு செய்க குறைவிலா(து) உயிர்கள் வாழ்க
நான்மறை அறங்கள் ஓங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவ நீதி விளங்குக உலகம் எல்லாம்.

— கந்தபுராணம்.

ഉ

GURUPADAM

# MESSAGE OF BLESSINGS

of

## His Holiness Kayilai Guru Mahasannidanam the 25th in the Holy line of spiritual Teachers of DHARMAPURAM ADHINAM

given to

## *The Second International Conference-Seminar at its concluding session in Madras*

*10—1—1968*

## BLESSINGS

" May thy glory fill the world,
Our Lord of Alavay in the South "

The Second World Tamil Conference-Seminar held in Madras is an historic one and has been conducted in a worthy manner. It has infused enthusiasm in the minds of the people not only in Tamizhagam but also in other places of the world where Tamil Studies are under-taken and pursued. It is note-worthy that this Conference has given a great impetus to the study and research of Tamil language, literature, arts, culture etc

Towards the close of the sixth century A. D., there had been a similar awakening and a fresh self awareness

on the part of the people of Tamizhagam. That was inspired by Religious Teachers who were proud of being Tamilians and spreading the higher values of life through the medium of Tamil language and music. In their devotional songs, they employed new literary forms and meters so as to reflect the varied moods and modalities. They proclaimed with pride that in expressing truth, beauty and the good, they really contributed to the growth of the Tamil Language and Tamil music.

Our Adhinam has been continuously contributing to the growth and preservation of Tamil language, literature, music, art and culture in its own way. With the grace of Lord Chokkanatha of Mathurai, we wish the efforts of the Hon'ble Chief Minister of our State, Perarijnar Thiru Annadurai be fruitful and be crowned with every success. Our blessings to the Hon'ble Chief Minister and his colleagues and to all those who have contributed to the great success of the Conference, and to those who have attended and participated in the Conference.

## BENEDICTION

Regular be the rains ! Yielding be the fertile lands !
To the rule of Law adhere the ruler !
Life of plenty live all beings !
Predominent be the virtues prescribed !
Continence and worship grow !
May the Universal law of Saivam prevail in the World.

— Kandha Puranam.

# விளையாட்டும் விழுப்பொருளும்

செஞ்சொற்கொண்டல், வித்துவான்,

திரு. சொ. சிங்காரவேலன் M. A.. Dip. Ling.

## 1. இரண்டாட்டம் :

உலகில் இன்பம் மட்டும் இல்லை; துன்பமும் உண்டு. இன்பத்தைக்கண்டு எக்களித்தலும், துன்பத்தைக் கண்டு துவளுதலும் உயிர்களின் நிலைகள். தென்றலை நுகர்ந்து இன்புறும் உள்ளம் புயலைக்கண்டால் திடுக்கிடுகிறது; நிலவைக் கண்டு குளிரும் நெஞ்சம் இருளைக் கண்டால் ஏங்குகிறது. ஏன் இந்த மாற்றம்? உயிரின் இயற்கை அது இன்பத்துக்கும், துன்பத்துக்குமாய் - ஒளிக்கும் இருளுக்குமாய் - வாழ்வுக்கும் சாவுக்குமாய் இரண்டாட்டமாடுகிறது உயிர். அதன் நோக்க மெல்லாம் இன்பம், இன்பம், இன்பந்தான். காட்சியில், கேள்வி யில், உணவில். உயிர்த்தலில், உறுதலில் எங்கும் இன்ப வேட்டையாடுகிறது உயிர்; ஒன்றில் குறைந்தாலும் அலுத் துச் சலித்து அயர்கின்றது. இன்ப வாழ்வின் ஒளிச்சுடர் எங்கு முளைக்கும் என்று ஏங்குகிறது.

## 1. 1. அருட்கோடை :

இந்த இரண்டாட்ட நிலை இன்ப விடுதலைக்கு என்று மாறும்? அந்த மடை மாற்றம் என்று நிகழும், எங்கு நிகழும், எவ்வாறு நிகழும் என்பதை ஏட்டறிவு காட்டாது; இலக்கியப் பயிற்சி காட்டாது; இலக்கணப் புலமை காட்டாது; இன்ப அனுபவந்தான் காட்டும். அந்த அனுபவந்தான், அனுபவத் தொகுப்புத்தான், அனுபவப் பாதைதான் சமயம். சமய நெறி உயிர்க்குலத்திற்கு வழங்கும் ஒப்பற்ற அருட்கொடை இந்த அனுபவமே ஆகும்.

## 1. 2. அகநாகரிகம் :

அனுபவத்தை உணர்த்துவதே சமயம். சமயச் சான்றோர் கள் தம் மொழிகளில் இந்த அனுபவத்தைத்தான் காட்டுகிறார் கள். அவர்கள் பெற்ற அனுபவம் பிறருக்கும் வழிகாட்டுகிறது.

அவர்கள் நுகர்ந்த இன்பம் பிறருக்கும் கிடைக்கிறது மனித குலத்துக்கே அது பொது உடைமை ஆகிறது. உலகுக்குக் கைம்மாறு கருதாமல் அவர்கள் வழங்கும் பேரின்ப ஒளியின் விளக்கமே நாகரிகம் என்று கூறலாம். ஆம்; நாம் இங்குக் குறிப்பிடுவது நடையும், உடையும், பழக்கமும், வழக்கமும் ஆகிய புற நாகரிகத்தை அல்ல; உயிரில் தோய்ந்து, உணர்வில் கலந்து பண்படும் உயர்நிலையாகிய அக நாகரிகத்தையே ஆம்.

இவ்விடத்தில் டாக்டர் இராதாகிருட்டினன் அவர்கள் உள்ளத்தின் உண்மை ஒளி விளங்க எழுதியுள்ள சில மொழிகள் நினைவுக்கு வருகின்றன: "நாகரிகம் என்னும் மரம் ஆத்மீக அனுபவங்களையே தன் வேராகக் கொண்டுள்ளது. ஆனால் நம்மில் பலருக்கு அது விளங்காத ஒன்று. இந்த உறுதியான வேர் இல்லையேல் இந்நெடுமரத்தின் இலைகளெல்லாம் உதிர்ந்து விடும்; மரமும் பட்டமரமாய்க் கோலம் கொள்ளும். நாகரிக வரலாற்றில் உலக உள்ளங்களைத் தன் விழுமிய அனுபவங்களால் வளப்படுத்திய பெருமை ஆசியாவிற்கு உண்டு."[1]

### 1. 2. 3. போப் (G. U. Pope) புகலுவன :

அனுபவம் பல வடிவங்களில் வரலாம். உரைநடையில், கவிதையில், உரையும் கவியும் கலந்த நடையில் வெளிவரலாம். சைவ சமயத்தைப் பொறுத்தவரையில் இச் சமயப் பேராசிரியர்கள் இனிய கவிதைகளாலேயே தங்கள் இன்ப அனுபவத்தை எடுத்து உரைத்திருக்கிறார்கள். "சைவம் தென்னிந்தியாவின் மிகப்பழைய நெறி; வரலாற்றுக்கு முற்பட்டது. ஆரியர் வருகைக்கு முன்னாலேயே தமிழ் மக்களால் பின்பற்றப்பட்டது. கடவுள் இயற்கை, உயிர் இயற்கை, நல்வினை தீவினைவிளைவுகள், காணப்படாத அருள் உலகம் முதலியவை ஆங்கில மொழியில் கூட முழுதும் வெளிப்படுத்தப்பெறவில்லை. செந்தமிழில் சிறந்த அன்பர்களாலும் அருளாளர்களாலும் சைவசமயம் எழுச்சிபெற்றுப் பரவியது. அச் சான்றோர் அயரா உழைப்பும், செயற்கருஞ் செயலும் உடையவராக விளங்கினர்" என்று ஜி. யூ. போப் அவர்கள் நடுநிலையில் நின்று நவிலும் நன்மொழிகள் இங்கு உணரத்தக்கன.[2]

### 2. 0. மணிவாசகர் அனுபவம் :

மணிவாசகர் 'கண்ணால் யானும் கண்டேன் காண்க' என்று கூறி,[3] இறைவனைத் தாம் நேர்பட்டு நின்று உறவாடி, அந்த

இன்பத்தைப் பாடிப் பாடி, கசிந்து கசிந்து கண்ணீரில் மலர்த்திய கவிதைகளே திருவாசகப் பாக்கள். 'ஈறிலாப் பதங்கள் யாவையும் கடந்த இன்பமே என்னுடைஅன்பே' என்று உருகிப் பாடும் உள்ளம், தான்பெற்ற அனுபவத்தை எப்படியெல்லாம் வெளிப்படுத்துகிறது? பெரும்பாலும் மகளிர் விளையாடும் நிலைகளில் இறைவன் பெரும்புகழை எடுத்துப் பேசுகின்றார். அம்மானை ஆடும்போதும், (அம்மானை) பூக்களைப் பறிக்கும் போதும், (பூவல்லி) வாசனைப்பொடி இடிக்கும் போதும், (பொற்சுண்ணம்) தெள்ளேணம் கொட்டும்போதும், (தெள்ளேணம்) நீராடும்போதும்,[4] (எம்பாவை) தோள்நோக்கி ஆடும்போதும், (தோள்நோக்கம்) ஊசல் ஆடி மகிழும்போதும் (ஊசல்) பறந்து விளையாடித் தட்டாமாலை சுற்றும்போதும் (உந்தியார்) பெண்கள் பாடி மகிழத்தக்க பாக்கள் திருவாசகத்தில் திகழ்கின்ற உண்மையை மறத்தலும் கூடுமோ? இந்நிலைகளுள் ஒன்றினை எடுத்து உணர்த்தி அதன் வாயிலாக விளங்கும் அருள் உண்மையைத் துணிதலே இங்கு நம் சிந்தனையாகும்.

## 2. 1. திருவுந்தியார் :

அடிகளார் தில்லையில் அருளிய பாடல்கள் பலவற்றுள் ஒன்றே 'திருவுந்தியார்.'[5] மெய்கண்ட சாத்திரங்களுள் ஒன்றாகிய 'திருவுந்தியார்' இதே நிலையை மேற்கொண்டு மெய்ப்பொருள் நுட்பங்களை விளக்கியிருத்தல் இங்கு உணரத்தக்கது. மகளிர் உந்திப்பறந்து விளையாடுதலைக் கண்டபோது அவர்கள் கூற்றுகக் கூறிய கலித்தாழிசைகள் பத்தொன்பது திருவாசகத்தில் இப்பகுதியில் அமைந்துள்ளன. இதன் கருத்து 'ஞான வெற்றி' அல்லது 'அருட்சக்தியின் சாமர்த்தியம்' என்று கூறுகின்றது பழைய குறிப்பு. இக் கருத்து எப்படிப் பொருந்தும் என்பதை ஆழ்ந்து சிந்தித்தல் வேண்டும். ஞானத்தின் வெற்றியா, அருட்சக்தியின் ஆற்றலா, எது இங்கு மேம்படுகிறது என்பது ஊன்றி உணரத்தக்க உண்மையாகும்.

### 2.1.1. புராண வரலாறுகள் :

இதில் பல வரலாறுகளை மணிவாசகர் குறிக்கின்றார். அவையனைத்தும் சிவபெருமானின் அருளாற்றலை விளக்கும் தன்மை உடையனவாய் உள்ளன. புராண வரலாறுகளை உணர்ந்து போற்றிக்கொள்ளவேண்டும் என்பது இதனினின்றும்விளங்கும். ஞானநெறி நின்ற நல்லாசிரியராகிய மணிவாசகர் போன்றோரே அவற்றை எடுத்தாண்டு பாராட்டுவர் எனின், அவற்றது

என்ற தொடரைப் பெய்துள்ளார்போலும். உபமன்னியு முனிவர்க்குப் பாற்கடல் ஈந்தது வீரச்செயல் ஆகாது எனினும், அதுவும் பெரும்பான்மை பற்றிய வழக்கில் அடங்கி நிற்றல் ஆழ்ந்துணர்ந்து கொள்ளத்தக்கது.

## 2. 3. மிகைப்பாட்டு ஒன்று :

சில படிகளிற் காணப்படாத ஒருபாட்டாகக் கீழ்வருவதைக் கூறுவர்.[8]

"ஏகாசமிட்ட இருடிகள் போகாமல்
ஆகாசங் காவலென் றுந்தீபற
அதற்கப்பாலுங் காவலென் றுந்தீபற"

இதுவும் உபமன்னியு முனிவர் பற்றிய திருப்பாட்டுமே வீரம் சாராதவை என்று விளம்பலாம். அவற்றையும் சார்புபற்றி முன்போலக் கோடலில் தவறில்லை.

## 2. 4. சிவபிரான் திருப்பெயர்கள் :

ஏகம்பர் (2), இளமுலைபங்கன் (4), பணைமுலைபாகன் (8) வானவர்கோன் (9) குமரன்றன் தாதை (17) கோலச்சடையன் (17) என்பன இப்பகுதியில் சிவபிரானைக் குறிக்க அடிகள் கையாண்டிருக்கும் சொற்றொடர்கள். (ஏகம்பர் மட்டுமே ஒரு சொல்)

## 2. 5. படிப்பினை :

தம்மிடத்திருந்த ஆற்றலை வீண்வழியிலும், தீய வழியிலும் செலவிடுவோர்க்கு இறைவன் தரும் தண்டனை அவனது மறக் கருணையின் கூறுகளில் ஒன்றாக இருக்குமேனும், அதன்விளைவு உலகிற்குப் பெரும் படிப்பினையாக இருக்கும் என்பது இவ்வரலாறுகளான் விளங்கும் மெய்ம்மையாகும். அருளனுபவத்திற் றோய்ந்த அடிகள் இத்திருப்பாட்டுக்களின் வாயிலாக உலகிற்கு வழங்கும் செய்தி இதுவே. மகளிர் விளையாட்டு நிலையில் இத்தகு மெய்ம்மையை விளக்கியுள்ள பெருங்கருணையை மறத்தலும் கூடுமோ ?

## 3. 0. விளையாட்டிலும் விழுப்பொருள் உணர்வு :

விளையாடும் விளையாட்டிலும் விழுப்பொருள் உணர்வு வேண்டும் என்பது அடிகள் திருவுள்ளம் ஆதல் வேண்டும்.

மெய்ம்மை நம்போன்ருருக்கு எவ்வளவு இன்றியமையாதது என்பது கூருமலே விளங்கும்.

### 2.1.1.1. முப்புரம் எரித்தல் :

முதலில் முப்புரங்களை எரித்த அருட்செயல் உரைக்கப்படுகின்றது. திருமூலர் நெறிப்படி மும்மலங்களையே முப்புரம் என்று குறியீட்டு நிலையில் (Symbolism) கூறப்பட்டனவாகக் கொள்ளல் வேண்டும்.

'வளைந்தது வில்; விளைந்தது பூசல்; முப்புரம் உளைந்தன. ஓரம்புகொண்டே ஏகம்பர் முப்புரம் எரிசெய்தார்; மலபரிபாகம் உற்றதும், திருவருட்பதிவு உண்டாகும். ஆன்மா தற்போதம் அழிந்திடும்' அவ்வாறு இப் புரம்எரித்தல் நிகழ்ந்தது என்று குறிப்பன முதல் மூன்று திருப்பாட்டுக்கள்.[6] தாரகாட்சன், கமலாட்சன், வித்தியுன்மாலி என்ற அம்முப்பெரு வீரரைக் காவலராகக் கொண்ட கருணையை அடுத்துவரும் திருப்பாட்டு வியந்துரைக்கின்றது.

### 2.1.1.2. தக்கன் வேள்வி :

தக்கன் வேள்வியின் விளைவுகளை அடுத்து வரும் திருப்பாட்டுக்கள் விவரிக்கின்றன. ஒவ்வொன்ருக அவற்றை எடுத்துரைக்கும் அழகு போற்றத்தக்கது. அதன்பிறகு உபமன்னியு முனிவர்க்குப் பாற்கடல் ஈந்த திறம் ஓதப்பட்டது. இறுதித் திருப்பாட்டு இராவணன் கயிலையைப் பெயர்க்க முற்பட்டபோது அவன் தலைகள் இற்று, அழிந்தமையை அருளுகின்றது.

"தேரை நிறுத்தி மலையெடுத்தான் சிரம்
ஈரைந்தும் இற்றவா றுந்தீபற
இருபதும் இற்றதென் றுந்தீபற".

என்பது நிறைவுத் திருப்பாட்டு.[7]

### 2.2. ஞான வேற்றியா?

இவ்வாறு திருவுந்தியாரின் பத்தொன்பது திருப்பாட்டுக்களும், முப்புரம் எரித்த அருள் வீரத்தையும், தக்கன் வேள்வியை யழித்த அருள் ஆற்றலையும், இராவணனை அழித்த ஈடற்ற வன்மையையும் பெரும்பான்மையும் போற்றிப் புகழ்தலைக் கண்ட சான்ருேர் இதற்கு விளக்கமாக 'ஞான வெற்றி'

மகளிர் விளையாட்டுத் துறைகளில் பலநிலைகளை மேற்கொண்டு அவர்கள் கூறிப்பாடி ஆடுவனவாகப் பல திருப்பாடல்கள் திருவாசகத்திற் காணப் பெறுவதற்குக் காரணம் இதுவே. மிக உயர்ந்த சான்றோர், அருளனுபவம் மிகுந்த ஆன்றோர், அழுது உலகியல் நிலையினின்று தமக்கு ஆன்ம விடுதலை தர வேண்டுமென்று உருகி நைந்த சீரியோர் மணிவாசகப் பெருமானார். அவரது கனிந்த உள்ளம், உலகமாந்தர்க்காகப் பெரிதும் உருகிற்று. எளிய நிலையில், விளையாட்டு நிலையிலும் விழுப்பொருளை மறவாது, நெஞ்சைப் பண்படுத்திக்கொள்ள அவர் காட்டிய வழியே திருவாசக வழி; அறவழி; கவிதை வழி.

---

அடிக்குறிப்பு விளக்கம்

[1] Dr. S. Radhakrishnan, Dhammapada (with introductory essays etc.) Oxford University Press, 2nd. Ed. 1954 - Preface.

[2] திருவாசகம் - மகாவித்துவான். ச. தண்டபாணி தேசிகர் - தருமையாதீனப் பதிப்பு - 1949; பக். 135, அடிக்குறிப்பு காண்க.

[3] Ibid. - திருவண்டப்பகுதி - 55ம் வரி.

[4] திருவெம்பாவை, நீராடும்போது சிவபிரானைப்பற்றிப் பாடியாடும் நிலையில் பாடப்பெற்றது என்பதும், திருப்பாவை 'பாவை நோன்பு' பற்றியது என்பதும், இவ்விருநூல்கட்கும் இடையே உள்ள இந்நுட்பமான வேறுபாடு ஊன்றி உணரத்தக்கது என்பதும் இவ்விடத்தே கருதத்தக்கன.

[5] Ibid - பக். 180.

[6] Ibid - 294, 295, 296 பாடல்கள்.

[7] Ibid - 312.

[8] Ibid - பக். 184 அடிக்குறிப்பு.

# பழி வளர்க்கும் செவிலி

**வித்துவான். திருமதி. ப. நீலா**

மக்களால் பொலிந்தான் மாண்புடைய மன்னன் தசரதன். பொறுமைக்கணியாம் இராமபிரான், பண்பின் கொள்கலம் பரதன், வீரத்தின் விளைநிலம் இலக்குவன், அமைதிகொண்ட சத்ருக்கனன், ஆகியோருடன் கங்கைக் கரை வேடன் குகன். கிஷ்கிந்தையரசன் சுக்ரீவன். வேற்றுமையில்லா நட்பினைக் கொண்ட விபீஷணன் - ஆகிய எழுவரையும் மக்களாகப் பெற்றுப் பொலிந்தான்.

பண்பின் நிலைக்களமான பரதன் தன்னை ஈன்ற தாயைத் தான் பழிவளர்க்கும் செவிலியாகக் காட்டுகின்ருன். பரதனின் பண்புநலனைப் பலரும் பாராட்டியே பேசுகிருர்கள்.

விஸ்வாமித்திரர் ஜனகமா மன்னனிடம் இராம இலக்குவர் களை அறிமுகம் செய்து வைக்கிருர். அதோடு அவ்விடத்தில் தசரதனுடைய மற்றைய புதல்வர்களைப் பற்றியும் எடுப்புடன் பேசுகிருர். ஒருவரைப்பற்றி அவரெதிரிலே சொல்லும் சொல்லைக்காட்டிலும் அவர் இல்லாதபோது சொல்லும் சொல் தான் உண்மை வடிவம் பெற்றதாக இருக்க முடியும். மேலும் உண்மையே பேசும் முனிவர்பிரான் கூற்றில் பொய்மை கலக்கக் காரணமும் இல்லை கோசிக முனிவர் கூற்றைப் பின்னும் வலியுறுத்திக் கோசலை, குகன் ஆகியோரும் பேசுகின்றனர்: ஆகவே பரதனைப் பற்றிய முதல் பாராட்டு உரையே நம்மனதில் மிக ஆழமாகப் பதிந்துவிடுகிறது. விஸ்வாமித்திரர் ஜனகனிடம் கூறுகிருர்.

"தள்ளரிய பெருநீதித் தனியாறு புகமண்டும்
பள்ளமெனும் தகையானைப் பரதன்எனும் பெயரானை
எள்ளரிய குணத்தாலும் எழிலாலும் இவ்விருந்த
வள்ளலையே அனையானைக் கேகயர் கோன்மகள் பயந்தாள்.

உலகத்தில் எத்தனையோ வகையான நீதிகள் உண்டு. எவ்வளவு பெரிய உத்தமனுக இருந்தாலும் ஒரு சில அறமுறை களைத்தான் கைக்கொண்டு நடக்க இயலும். இராமனுங்கூட ஒருபத்தினி - ஒருசொல் - ஓர்அம்பு என்ற அறத்திற்கே இலக்க

மாகி நின்ருன் என்கிருர் ஸ்ரீதியாகையர்வாள். ஆனுல்இளையவன் பரதனே நீதி என்று எத்தனே ஆறுகள் உண்டோ அவைகள் எல்லாம் சங்கமிக்கிற சமுத்திரமாக இருப்பவன். எள்ளரிய குணத்தாலும் அழகாலும் இங்கிருக்கும் இராமனேயே ஒப்பவன் என்று பரதனுடைய கீர்த்தியைப் போற்றுகிருர்.

கோசலேயின் உள்ளத்தில் பரதன் எப்படி இடம் கொண்டுள்ளான்? இதோ அவளே பேசுகிருள். இராமனுக்கு முடிசூட்டு விழா நடைபெறப்போகின்றது. அந்நிகழ்ச்சி முடிந்தபின் தனயன் தன்னிடம் ஆசிபெற வருவான் என்று வழிமேல் விழி கூட்டி நிற்கிருள். 'பரியினும் பாலல்ல ஆகாவாம்' - என்ற மொழியே வென்றது. இராமன் வருகிருன். குழைக்கின்ற கவரியில்லே. கொற்றவன் குடை கவிக்கவில்லே. விதி முன்னும் தருமம் பின்னுமாகத் துணே வரத்தனியனுய் வருகிருன். 'முடி புனேய ஏதும் இடையூறு உண்டோ' - என மனநெகிழ்ச்சிகளே எல்லாம் அடக்கிக்கொண்டு கேட்கிருள் கோசலே. நின் காதல் திருமகன், பங்கமில் குணத்து எம்பி பரதன் - துங்கமாமுடி சூடுகிருன் - எனச் சுருங்கிய விடையாகத் தருகிருன் இராகவன். உடன் கோசலே மனம் நிறைவுபெறுகிறது. முறைமை என்பது ஒன்றுதான் இல்லே. காரணம் நீ மூத்தவனுகப் பிறந்ததுதான். மற்றவைகளே நோக்கும்போது மும்மையின் நிறைகுணத்தவன். நின்னினும் நல்லனுல் - குறைவிலன் எனக்கூறி நும்பிக்கு நானிலம் கொடுத்து ஒன்றி வாழுதி! என்று வாழ்த்துக் கூறினுள். பரதன் குணத்தாலும், அழகாலும் இராமனே ஒத்தவன் என்ற முனிவர் வாக்கை அத்தாய் மாற்றிவிட்டாள். நின்னிலும் நல்லன் - நிறைகுணத்தவன் - என்று பரதனின் உயர்வைத் தெள்ளெனக் காட்டிவிட்டாள். இராமனேயும் பரத. இலக்குவ, சத்ருக்கனர்களேயும் இணைத்து வளர்த்த கோசலே இத்துணே நுண்ணிதாய்ப் பேசியதில் வியப்பதிகமில்லே.

கங்கைக் கரையின் காட்டுவேடன் குகன் பரதனே அளந்து கூறும் சொல்லேக் கேட்போமாஞல் நாம் சுட்டுவிரலே மூக்கின் உச்சியில் வைத்து நிற்போம் என்பதில் ஐயமில்லே. இலக்குவனுடைய சகோதர பாசத்தை எண்ணி உருகுகிருன் குகன். காலேவாயளவும் இமைப்பின்றி அண்ணலே அவன் காத்து நின்றவிதம் அவனுடைய நெஞ்சை வெம்பி வெந்தழியச் செய்து விட்டது. தலேமகனேயும் தம்பியையும் நோக்கிய அம்பியின் தலேவன் கண்ணீர் அருவிசோர் குன்றென நின்ருன். அந்த இலக்குவனும் தம்பி - இவனும் தம்பியா என்று படைதிரட்டி

வரும் பரதனைப் பார்த்துப் பதைபதைத்து நிற்கிறான். இருக்கட்டும். ஆழ நெடுந்திரை ஆறு கடந்து இவர் போகும் விதத்தைப் பார்த்துவிடுகிறேன். தோழமை என்று அண்ணல் சொல்லிய சொல்லுக்காக எங்கள் உயிரையே கொடுத்து இவனைத் தடுப்போம் என்று கூறிக் காத்து நிற்கிறான் இக்கரையில், அங்கே பரதனின் நிலை இருந்தவாறென்னே!

தன் முன்னோனைக் காணலாம் எனும் ஆசைகடாவ அயோத்தி வந்த பரதனுக்கு இடியிறங்கியது போலப் பல செய்திகள் தெரிய வந்தன. தேவி தம்பியென்று இவ்விருவரோடும் வனத்தான் இராமன் - வானத்தான் மன்னன் என்ற செய்திகளைச் சிறிதும் கூசாமல் கூறினாள் கைகேயி. ஆருத்துயரொடு அன்னை கோசலையைக் காண வருகிறான். அவளுடைய பாதங்களில் விழுந்து பணிகின்றான். தயரதனால் விளக்கம்பெற்ற இக் குலத்திற்குப் பரதனாகிய நான் ஒரு பழியாக வல்லவோ மாறி விட்டேன் என்று புலம்புகிறான். 'எந்தையும் ஆயும் எம்பிரானும் ஆகிய அந்தமில் பெருங்குணத்து இராமனை நான் கானகம் சென்று மீட்டு அழைத்து வருவேன்' என்று வற்கலையின் உடையோடு புறப்பட்டு வருகிறான்.

இப்படி வரும் பரதனைத் தான் பொங்கிய சினத்தோடு வரவேற்கிறான் கங்கைவேடன். கரையை அணுகி வருபவனைக் கண்ணுறக்கண்டான்.

மாசடைந்த மெய்யோடு - நற்கலையில் மதியென்ன நகையிழந்த முகத்தோடு - திசைநோக்கி வணங்கி வரும் இவனா பரதன்! இவனா தீங்கு குறித்து வரும் தீயோன்... இல்லை... இல்லை... நானல்லவா தவறாக எண்ணி ஏமாந்துவிட்டேன். இந்நம்பி என் நாயகனை ஒக்கின்றான். தவவேடம் தலைக் கொண்டான். துன்பத்துள் துடக்குண்டவனைப்போல இருக்கிறான். எம்பெருமான் பின் பிறந்தவர் எப்படிப் பிழைசெய்வார்? என்று உண்மை உணர்ந்தான். நாவாயில் அக்கரை சென்றான்- வணங்கினான்! பரதனும் அவனைத் தழுவிக்கொண்டான். எய்தியது என்னை என்று கேட்கிறான் குகன்.

"முழுதுலகு அளித்த தந்தை
முந்தையோர் முறையினின்றும்
வழுவினன், அதனை நீக்க
மன்னனைக் கொணர்வான்"

வந்தேன் என்ருன் பண்புநிறை பரதன். அவ்வளவுதான் குகன் தன் எண்ணத்திற்காக நொந்து கொண்டு மீட்டும் மண்ணதனில் வீழ்ந்து பரதனின் பாதங்களில் தலைபதித்தான். தாயுரையால் தாதை உதவிய தரணியைத் தீவினை எனக்கருதி நீத்து வந்த புனிதனே! ஆயிரம் இராமர் நின்கேழ் ஆவரோ என்று அகமாரப் பாராட்டுகிருன். உன் மரபினோர் புகழை எல்லாம் உன்புகழ் ஆக்கிக் கொண்டாயே உயர்குணத்து உரவுத் தோளாய்! என்று கூறும் குகன் வார்த்தைகளால் பரதனின் பண்பு மலையிடை விளக்காகிறது. இதன் பின்பு தனது தாயர்களைக் குகனுக்கு அறிமுகம் செய்து வைக்கிருன் பரதன். கோசலையின் மணிவயிற்றை வாழ்த்துகிருன். சுமித்திரையின் பிறப்பைப் போற்றுகிருன். அடுத்து நிற்பவள் கைகேயி, மாயன் நெடுமையால் அளந்த உலகைத் தன் மனக் கொடுமையால் அளக்கும் பெண்ணரக்கி இவள். இவள் யார் தெரியுமா?

'' படர்எலாம் படைத்தாளைப் பழிவளர்க்கும்
செவிலியைத் தன் பாழ்த்த பாவிக்
குடரிலே நெடுங்காலம் கிடந்தேற்கும்
உயிர்ப்பாரம் குறைந்து தேய
உடரெல்லாம் உயிரில்லா எனத்தோன்றும்
உலகத்தே ஒருத்தி யன்றே
இடரிலா முகத்தாளை அறிந்திலையேல்
இந்நின்ருள் என்னை ஈன்ருள் ''

இப்பொழுது வந்துள்ள துன்பங்களுக்கெல்லாம் காரணகர்த்தா இவளே. என்னையும் இவள்தான் பெற்று வளர்த்தாள். தன்னைப் பழி என்றும் தன்னைப் பேணி வளர்த்த தாய் இவள் என்றும் பரதன் கூறும் திறன் வெகு நுட்பமுடையது. தாயாக இருக்கும் தகுதியற்றவள் - ஆகவே அந்நிலையினின்றும் ஒருபடி தாழ்த்தி, 'செவிலி' என்ருன். கோசலையிடம் தன்னைப் 'பழி'- என்று தாழ்த்திக் கொள்வதை

'' வரதனில் ஒளிபெற வளர்ந்த தொல்குலம்
பரதன் என்று ஒருபழி படைத்தது ''

என்பதாகக் கண்டோம். ஆகவே குகப்படலத்தில் அதனை மீட்டும் வலியுறுத்தி 'பழி வளர்க்கும் செவிலி' இவள் என்ருன். அவள் வயிற்றில்தான் நான் நெடுங்காலம் கிடந்தேன் - இருந்தும் அவள் எனக்கு நற்ருய் (நல்ல தாய்) இல்லை. நான் உனக்கு இத்துணை விரிவாக ஏன் சொல்லவேண்டும். இந்த உலக

உயிர்கள் யாவும் தயரதன் மறைவினலும், இராமன் துறவினலும் வாடி வருந்தி உயிரற்ற உடலங்களாய் நிற்க - இவள் மட்டும் இடரில்லா முகத்தோடு காட்சி தருகிருளே! இதிலிருந்தே நீ உணரலாமே இவள் யாரென்று, நீ உணரத் தவறிவிட்டாய் ஆயின் நான் உணர்த்தத் தவறமாட்டேன். இவள் தான் என்னை ஈன்றவள் என்று பெருநீதித் தனியாறு புகமண்டும் பரதன் எனும் பெயரான் குறிப்பிடுகிருன். பண்புக்கோர் பரதன் என்ற பெருந்தகையால், பழிவளர்க்கும் செவிலி என்ற பட்டம் ஏற்ருள் கொடுமனக் கூனியால் அறிவுதிரிந்த கேகய மடந்தை.

# பார்! உழவின் பெருமை

(நீலா)

கல்லாமை எனுந்தீமை கடுகி ஓட
கரவாமை எனும்பண்பு நெஞ்சை மூட
இல்லாமை எனுஞ்சொல்லே இல்லை யாக
ஈயாமை எனுங்கொடுமை மறந்து தீய
சொல்லாமை என்ற அறம் மனத்துள் கொண்டு
சோர்வச்சம் வறுமைதரும் மடமை நம்மைப்
புல்லாமை நன்றென்று வேண்டித் தையில்
பொங்கலிட முந்திடுவோம் எழுக ஒன்ருய்.

ஏர்உழவன் வியர்வையிலே விளைத்த செந்நெல்
ஏற்றமுடைச் செங்கரும்பு இஞ்சி மஞ்சள்
சீர்உழவின் விளைபயனைத் தமிழ்நெஞ் சங்கள்
சிறப்போடு கொண்டாடும் மகிழ்வு கொள்ளும்
நீர்உழவில் விளையாடும் கெண்டை மீன்கள்
நிமிர்கின்ற தமிழர்வளம் காட்டும் இந்நாள்
பார்உழவின் பெருமையென்று பறைகொண் டார்த்துப்
போற்றிடுவோம் தமிழ்வாழும் பொங்கல் வாழ்க!

# சூரியன்

வேதாந்த சிரோமணி,

## பிர்மஸ்ரீ. K. இராஜகோபால சாஸ்திரிகள்

(மலர் 27, இதழ் 1, பக்கம் 26 இன் தொடர்ச்சி)

சூரியனுடைய த்வாரபாலகர்கள் மாடரன், பிங்களன், தண்டன் என்று அமரம் கூறும். சில்பரத்னம், மண்டலன் பிங்களன் என்று கூறும். நாலு த்வாரங்களிலும் முறையே தர்ம, அர்த்த, கருட, யமன், குபேர, விநாயக, ரைவத தண்டி என இரண்டுஇரண்டுதுவாரபாலகர்உண்டுஎன்றும்கூறுவர். சூரியன் சிவபெருமானைப் பூசிப்பதாக பல க்ஷேத்திரங்களில் காணலாம். நம் முன்னோர்கள் சில்பசாஸ்திரத்திலும் ஜ்யோதிஷ சாஸ்திரத்திலும் உள்ள திறமையைக் காட்டி ஆலயங்களை அமைத்துள்ளனர். ஒவ்வொரு வருஷமும் குறிப்பிட்ட மாதத்தில், குறிப்பிட்ட தேதியில், குறிப்பிட்ட நேரத்தில் சூரியனுடைய கதிர்கள் ஈச்வர பிம்பத்தின்மேல் விழுவதை இன்றும் காணலாம். சிவஸ்தல மஞ்சரியிலும், பஞ்சாங்கங்களிலும், நேரிலும், கேள்வியாலும் உணர்ந்த சில ஸ்தலங்களைப் பார்க்கலாம். கிழக்குப் பார்த்த சந்நிதிகளில் காலையில் உதிக்கும்பொழுதும், மேற்குப் பார்த்த சந்நிதிகளில் மாலையில் மறையும்பொழுதும் சூரிய பூசை நடைபெறும்.

சித்திரைமீ 1உ முதல் 7உ வரையில் காலையில் புறவார் பனங்காட்டூரில் முதலில் சுவாமிக்கும் பிறகு அம்பாளுக்கும் சூரிய பூசை. 1, 2, 3 தேதிகளில் கூடலை ஆற்றூரிலும், 5, 6, 7 தேதிகளில் ஆடுதுறையிலும், 7உ முதல் 18உ வரையில் 12 நாட்கள் செம்பொனார்கோயிலிலும், 11, 12, 13 தேதிகளில் கும்பகோணம் நாகேச்வரஸ்வாமிகோயிலிலும் சூரிய பூசை நடைபெறும்.

புரட்டாசிமீ 7, 8, 9 திருப்பைஞ்ஞீலியிலும், 19, 20, 21 புள்ளிருக்கு வேளூரிலும் திருக்கடவூரிலும், ஐப்பசிமீ 9உ முதல் 15உ வரை எத்தாப்பூர் சாம்பமூர்த்திகோயிலிலும், கிருஷ்ணபக்ஷம் சதுர்தசி முதல் ஏழு நாட்கள் திருநெல்லிக்காவிலும், மாசிமீ 1உ முதல் 7 நாள் எத்தாப்பூர் சாம்பமூர்த்தி கோயிலிலும் 13, 14, 15, திருக்

கண்டியூரிலும் 17௳ முதல் 21 வரை குன்றத்தூரிலும் 18௳ முதல் 24வரை திருநெல்லிக்காவலிலும் 19, 20, 21 தேதிகளில் புள்ளிருக்கு வேளூரிலும், 21௳ முதல் 25௳ வரையில் பூந்தமல்லி வைத்ய நாதருக்கும், 23, 24, 25 தேதிகளில் திருஅழுந்தூரிலும், பங்குனி மாதம் 1௳ முதல் 7௳ வரையில் மாயூரம் வள்ளலார்கோயிலிலும், 7, 8, 9 தேதிகளில் திருப்பைஞ்ஞீலியிலும், 12, 13, 14 தேதிகளில் தெலுங்கு நாட்டிலுள்ள நாகலாபுரத்திலும 13௳ முதல் 22௳ வரையில் தெளிச்சேரியிலும், 13, 14, 15 தேதிகளில் வேதிகுடியிலும், திருத்தணி ஆறுமுகசாமிக்கும். 23 முதல் 27 வரையில் திருநாவலூரிலும், 25௳ முதல் 29௳ வரையில் மாயூரத்தைச் சேர்ந்த பொன்னூரிலும் சூரிய பூசை நடைபெறும்.

பாடல்பெற்ற ஸதலங்களில் ஒன்ருகிய பரிதிநியமம், அவ்வூரில் சூரியன் ஈசனைப் பூசித்துப் பேறுபெற்றமையால் உண்டான பெயராகும்.

சூரியன் பூராட நக்ஷத்திரத்தில் சஞ்சரிக்கும் காலம் கெர்ப்போட்டம் எனப்படும். இது பெரும்பாலும் மார்கழிமீ 14௳ முதல் சுமார் 14 நாட்கள் ஆகலாம்.

கிருத்திகா நக்ஷத்திரம் அக்நிதைவதம். பரணி நக்ஷத்திரம் நாலாம் பாதமும், கிருத்திகையின் நான்கு பாதங்களும் ரோகிணியின் முதல் பாதமும் ஆக ஆறுபாதங்களிலும் சூரியன் சஞ்சரிக்கும் காலம் அக்னி நக்ஷத்திரம் எனப்படும். இது பெரும்பாலும் சித்திரைமீ 20௳க்கு ஆரம்பமாகும்.

பாரதத்தில், அக்ஷய பாத்திரம் கொடுத்த வரலாற்றைப் பற்றிக் கூறுமிடத்தில் ஒன்றும், (ஆரண்பர் - அத்தி 3) ந்ருசிம்ம புராணத்தில் இருபதாவது அத்தியாயத்தில் சூரியனை த்வஷ்டா துதிப்பதாக ஒன்றும், அதர்வண ரஹஸ்யத்திலுள்ளதாக அஷ்டோத்தர கதம்பத்தில் அச்சிடப்பட்டஒன்றும் ஆகியமூன்று அஷ்டோத்தர சதநாமஸ்தோத்திரங்கள் உள்ளன. சென்னையில் சமீபத்தில் அச்சிடப்பட்ட அஷ்டோத்திர கதம்பத்தில் நாமாவளிமட்டும் வேறுஒருவிதமாகவும் அச்சிடப்பட்டிருக்கிறது.

பவிஷ்யோத்தர புராணத்தில் ஏழாவது கல்பத்தில் ஒரு சூரிய சகஸ்ரநாமஸ்தோத்திரமும். ஸ்கந்தபுராணத்தில் கூறப்படும் மற்ருெருவகையான ஸகஸ்ரநாமஸ்தோத்திரமும்உள்ளன.

சூரியனுடைய காயத்ரியும் மூன்று காணப்படுகிறது.

(1) भास्कराय विद्महे महद्युतिकराय धीमहि ।
तन्नः सूर्यः प्रचोदयात् ।

(2) अश्वध्वजाय विद्महे पद्महस्ताय धीमहि ।
तन्नः सूर्यः प्रचोदयात् ।

(3) भास्कराय विद्महे महद्युतिकराय धीमहि ।
तन्नो आदित्यः प्रचोदयात् ।

பலவகையான மந்திரங்களும் உள்ளன. அவற்றிற்குத் தனித் தனியாகத் தியானங்களும், ரிஷி, சந்தஸ், நியாஸங்களும் உள்ளன. அவை யாவும் குருமுகமாக உபதேசம் பெறத்தக்கன ஆதலின் கூறப்படவில்லை. சூரியனுடைய ஆவரண பூசை, பூசாகல்பம், மந்திரம், யந்திரம் முதலியன மந்திர மஹார்ணவத் தில், ஆதித்யனுக்காக ஏற்பட்ட தனிப்பகுதியில் விரிவாக உள்ளன. சாரதா திலகத்தில் தசாக்ஷர மந்திரம் உள்ளது.

ஜாம்வதி புத்திரன் சாம்பனுக்கு சூரியன் உபதேசித்ததாக இருபத்தொரு நாமமுடைய ஒரு கவசம் சாம்ப புராணத்திலும், பிர்மயாமளத்தில் ஒரு ஸ்தோத்திரமும், மயூர கவியின் சூரிய சதகமும் தீக்ஷிதரின் ஆதித்ய ஸ்தோத்திரமும், தண்டபாணி சுவாமிகள் இயற்றிய சூரிய மாலையும், மற்றும் பல ஸ்துதிகளும் பிரசித்தமாக உள்ளன. ஸ்காந்த புராணத்திலுள்ள கவசமே எங்கும் பிரசித்தமாக உள்ளது. பிர்மயாமளத்தில் உள்ளது ஒன்று மந்திர மஹார்ணவத்தில் காணப்படுகிறது.

சிவபெருமானுடைய அஷ்டமூர்த்தங்களில் ஒன்று சூரியன். தினந்தோறும் சூரிய பூசை தொடங்கியே சிவாலயங்களில் பகல் பூசை நடைபெறும். ஆகவே தனியாக சூரியனைக் காணலாம். ஆயினும் நவக்கிரஹங்களில் சூரியன் இடம் பெற்றுள்ளான். சில ஆலயங்களில் நவக்கிரஹங்கள் ஒரே வரிசையாகவும் உள்ளன. சிவபெருமானுடைய திருமுன்பு அவை வலிமை குன்றி இருத்தலையே அது காட்டும். சில இடங்கள் கிழக்கே சந்திரன், தென்கிழக்கில் செவ்வாய், தெற்கில் குரு, தென்மேற் கில் ராகு, மேற்கே சுக்கிரன், வடமேற்கில் கேது, வடக்கே புதன் வடகிழக்கே சனி, நடுவில் சூரியன் இந்த நிலையில் காணலாம்.

கிழக்கே சுக்ரன், தென்கிழக்கில் சந்திரன், தெற்கே செவ் வாய், தென்மேற்கில் ராகு, மேற்கே சனி, வடமேற்கில் கேது,

வடக்கே குரு, வடகிழக்கில் புதன் இந்த முறையில் வைதிகர் பூசிப்பர். சூரியன் மட்டும் நடுவில்தான். முதற்குலோத்துங்கன் காலத்தில் ஏற்பட்ட மார்த்தண்டாலயம் என்ற சூரியனார்கோவில் ஆடுதுறையை அடுத்துள்ளது. இங்கு சூரியன் தேவனாகவும், மற்ற கிரஹங்கள் சுற்றிலும் இடம் பெற்றுள்ளனர். இங்கு அமைந்திருக்கும் முறையும் தனிப்பட்டதே.

यो यो यां यां तनुं भक्तः श्रद्धयार्चितुमिच्छति ।
तस्य तस्याचलां तामेव विदधाम्यहम् ॥

என்ற கீதா வாக்கியத்தின்படி அவரவர்கட்கு மனதிற்குப்பிடித்த மூர்த்தத்தில் மனதைச் செலுத்தி பூசித்து வணங்கிச் சூரியனருளால் பிணியற்ற வாழ்வை அடைவோமாக.

---

## EXTRACT FROM THE VISITORS' BOOK

### Dharmapuram Adhinam

### Sri Vaithianathaswamy Devasthanam, Vaithiswarankoil

அடியேனும், எனது மனைவியும், இன்று யாவர்க்கும் இறைவனும் எம்பிரான் வைத்தீஸ்வரனையும் அம்பாள் தையல்நாயகியையும் எம்பிரான் முத்துக்குமாரஸ்வாமியையும் ஒருங்கே தரிசிக்கும் பெறற்கரிய பேறு பெற்றோம்.

"கடவுள் ஒருவனுடைய எண்ணங்களைப் பொருட்படுத்துகிறானே தவிர, எண்ணங்களால் எழும் காரியத்தை அவ்வளவாகப் பொருட்படுத்துவதில்லை. ஏனெனில் பல உயர்ந்த எண்ணங்கள் காரியத்தில் உருவாகாமல் போய்விடலாம். ஆனால் அந்த எண்ணங்களுக்குக் கடவுள் மதிப்புக்கொடுப்பார். மேலும் எண்ணங்களுக்குக் காரியம் முரண்பாடாக இருப்பினுங்கூட, கடவுள் எண்ணங்களைத்தான் பொருட்படுத்துகிறார். காரியத்தைக் கவனிப்பதில்லை. இந்தக் கருத்தை ஸ்ரீ நீலகண்ட தீட்சதர் கூறுகிறார்:

अर्चामीति धिया यदेव कुसुमं क्षिप्त्वा जनो मुच्यते ।
विध्यामीति धिया तदेव विकिरन्भस्मीकृतो मन्मथः ॥
इत्याभ्यन्तर वृत्तिमात्ररसिको बाह्यानपेक्षश्च यः ।
स स्वामी मम दैवतं तदितरो नाम्नापि नाम्नायते ॥

எண்ணங்களுக்குப் பெரும்சக்தி உண்டு என்பதை ஸ்வாமி விவேகானந்தரும் தெளிவாகக் கூறியிருக்கிறார். ஊக்கத்துடன் நல்ல எண்ணங்களுக்கு மனதில் இடம் கொடுத்தால் உலகத்துக்கே முன்னேற்றத்தை ஏற்படுத்திவிடலாம் என்பது விவேகானந்தரின் கருத்து

"If One-millionth part of the men and woman who live in this world, simply sit down and for a few minutes say: You are all God, O Ye men and living beings, you are all manifestations of the one living Deity" the whole world will be changed in half an hour. Instead of throwing tremendous bomb-shells of hatred into every corner instead of projecting currents of jealousy and evil thought, in every country people will think that it is all He".

எனவே மதத்தின் பேராலும், சாதி வேறுபாடு அடிப்படையின் பேராலும் சண்டை சச்சரவுகள், கடவுள் தாரதம்யம் பேசி அதன்விளைவாகப் பூசல்கள் இவையெல்லாமின்றி நல்ல எண்ணம் கொண்ட பக்தியுடன் ஒற்றுமையாக வாழவேண்டியது மிகவும் அவசியம் என்பதை எல்லோரும் உணரும் வண்ணம் இவண் கோயில்கொண்டு எழுந்தருளியிருக்கும் தெய்வங்களை ஆத்மார்த்தமாக வணங்கி யாவர்க்கும் சகல நலமும் அருள்பாலிக்கவேண்டும் என்பதாகவும் பிரார்த்தித்துக்கொள்கிறோம்.

மிகசசிறந்த முறையில் இத் திருக்கோயில்களைப் பரிபாலித்து வரும் அன்பர்களுக்கும் இவண் பணியாற்றும் பேறுபெற்ற அருளாளர்கள் அத்தனைபேருக்கும் எனது பாராட்டுதல்களும் வணக்கமும் உரித்தாகுக. நமஸ்காரம்.

அன்புள்ள,
(ஓ-ம்.) எஸ். சாமிக்கண்ணு,
மாவட்ட & செஷன்ஸ் நீதிபதி,
நாகப்பட்டினம்.

12—11—67.

# ஸ்ரீமத் வெள்ளியம்பலவாணத் தம்பிரான்

தருமையாதீன முத்திநிச்சய, ஞானவரண விளக்கப் பேருரை (மாபாடியம்) உடையார், வடமொழி தென்மொழி களில் வல்ல **ஸ்ரீமத் வெள்ளியம்பலவாணத் தம்பிரான் சுவாமி கள்.** இவர்களுடைய பிள்ளைப்பருவத்து நிகழ்ச்சிகள் ஒன்றும் அறியக்கூடவில்லை. இவர்கள் தருமையாதீன முதற்குரவர் ஸ்ரீ குருஞானசம்பந்தர் பரம்பரையின் குழந்தையாக ஆனபிறகே இவர்கள் வாழ்வு யாவரானும் அறியவேண்டிய வாழ்வாக - தமிழுக்கும், சைவத்திற்கும் ஆக்கம் அளித்த வாழ்வாக ஆயிற்று.

இவர்கள் இவ்வாதீனத்தில் நான்காவது பட்டத்தில் எழுந் தருளியிருந்த ஞானநுபூதிச் செல்வராகிய மாசிலாமணி தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகளிடத்தில் துறவாச்சிரமம் மேற்கொள்ளும் விருப்பத்தைத் தெரிவித்துக் கொண்டார்கள். குருமூர்த்திகள் இவரது இளமையின் முதுமையைத் திருவுளங் கொண்டு, நல்லதொருநாளிலே சைவசந்நியாச முறைப்படி சந்நியாசம் உதவினர். பெற்றுக்கொண்ட இவர்கள் ஆதீன சம்பிரதாயப்படி யாத்திரை செல்லப் புறப்பட்டுக் காசிவரை சென்றார்கள்.

அப்போது காசியில், மலைமகள் கேள்வன் மன்னிய சிந்தையி னாலும், கலைமகள் கருணை பெருக்கெடுத்தோடுவதாலும் நிகழ்ந்த பெருஞ்சொல்மழையால் இமயம் வரையிலும் தமது ஞானகுரவர் ஸ்ரீ குருஞானசம்பந்தர் அருட்டிறத்தையும், சைவசித்தாந்தக் கொள்கைகளையும், தமிழமுதின் தேறலையும் பரப்பிக்கொண்டு, பல்வகையறங்களையும் பண்புடன் செய்து. கல்விக் கடற்கோர் கலங்கரை விளக்காய், பழுத்த கவியமுதம் தோன்றும் பாற் கடலாய். துறவொழுக்கத்தின் நிலைக்களனாய், முருகனருளால் உருகிய மனத்துடன் மாசிலாமணி ஞானசம்பந்தரின் ஞான ராஜ்யப் பிரதிநிதியாய், வடநாட்டு மக்களின் சாக்தேயம், காண பத்யம், ஸ்மார்த்தம் முதலான கொள்கையால் மேற்கொண்டு உள்ள அறியாமையாகிய கப்பத்தைக் கொண்டு, சித்தாந்த ஞானச் செங்கோலாட்சி செலுத்தி விளங்கிவந்த குமரகுருபர

சுவாமிகளை அடைந்தனர். சுவாமிகளுடைய பல மொழிவன்மையையும், சொல்லாற்றல், ஒழுக்கநிலை, மக்களோடு பழகும் மாண்பு ஆகியவற்றையும் கண்டு, இவர்களிடம் கல்வி பயில வேண்டும் என்ற எண்ணம் நாளுக்குநாள் வளர்ந்துவந்தது. இக்கருத்தைக் காலம் அறிந்து இடம் அறிந்து ஒருநாள் குமர குருபர சுவாமிகளிடம் தெரிவித்தனர். சுவாமிகள் இவருடைய தணியாத கல்விக் காதலைக் கண்டு எல்லாக் கல்விகளையும் கற்பித்தார்கள். இவர்களும் விரும்பிக் கற்பவர்களாதலின், கருவி நூற் படிப்பும், ஞான நூற் சிந்தனையும் செய்து, பதிநூல்களாகிய சிவாகமங்களையும் முறையே ஓதினர். சித்தாந்தக் கருத்தின் உயர்வை நாட்டிற்கு அறிவிக்கப் புறச்சமய நூல்களையும் நன்கு ஓதியுணர்ந்து சித்தாந்தத்தின் சிறப்பை ஆய்ந்து வந்தனர். இவர்களுக்குச் சொல்லாற்றலும், செய்யுளியற்றும் சிறப்பும் தானுகவே அமைவனவாயின, 'ஆசுமுதல் நாற்கவியும், அட்டாவதானமும் சீர்பேசுமியல் பல்காப்பியத்தொகையும், ஓசை எழுத்துமுதலாம் ஐந்திலக்கணமும் தோய்ந்து பழுத்த புலமையைச் செந்தமிழ்ப் பரமாசாரியனுகிய சண்முகப் பெருமானிடம் வேண்டிப்பெற்ற விழுமியோரிடம் படித்ததால் அவர் புகட்டும் ஒவ்வொரு சொற்சங்கத்திலும் கந்தனருட்டேனல்லவா கலந்திருக்கும்! அதனுல் இவர் புலமை இறையொளி வீசுவதாக, எல்லோரையும் வசிப்பதாக இருந்தது என்பதில் வியப்பென்னை!

இங்ஙனம் கல்விக்கடலை நீந்திக்கொண்டிருக்கும்போதே 'கல்வியென்னும் அல்லலிற் பிழைத்தும்' என்பனபோன்ற ஞான வாக்குக்கள் மனத்துள்தோன்றி 'நீயடைந்த இவைகள் யாவும் நூற்கல்வி. இக்கல்விக்கு ஒரு தனிப் பெருமையும், அழகும் உண்டாகவேண்டுமானுல், குறிவழியநுபவங் கூடுதல் வேண்டும். அதனை எளிதில் உணர்த்துவது குருமொழியேயாகும்.' என்று இவர் உள்ளத்தை ஊக்கத் தொடங்கின, உடனே தமது ஞான பீடத்துக்குச் செல்லவேண்டும் என்ற கருத்தைத் தமது கல்வி யாசிரியராகிய குமரகுருபரசுவாமிகளிடம் குறிப்பால் உணர்த்தினுர். உடனே சுவாமிகள் விடைதந்தனர். இவர் தருமையம் பதியையடைந்து, அப்போது 5 ஆவது பட்டமாகப் பீடர்த்தமர்ந்திருந்த ஸ்ரீ ஞானசம்பந்ததேசிக மகாசந்நிதானம் அவர்கள் திருவடிகளில் நமஸ்கரித்து எழுந்து கண்கள்நீர்வார, ஞானசம்பந்தர் சமுகமாலைத் தோத்திரத்தை மெய்ப்பாட்டுடன் பாடி நின்றனர்.

குருநாதர் இவரது உள்ளக்கனிவையும், ஞானதாகத்தையும் உணர்ந்து ஞானோபதேசம் செய்து, வெள்ளியம்பலவாணன் என்ற தீக்ஷா நாமத்தையும் சூட்டியருளினார்கள். வெள்ளியம்பல வாணத் தம்பிரான் சுவாமிகளாகிய இவர்கள் "தெளிவு குருவின் திருநாமஞ் செப்பல், தெளிவு குருரூபம் சிந்தித்தருளே" என்ற திருமூலர் வாக்கின்படி எல்லாம் குருவாக - குருவினுடைய தாகக் கண்டு, கேட்டு, சிந்தித்து, தெளிந்த அநுபூதிமானாய்த் தருமையிலேயே அணுக்கத் தொண்டராக வாழ்ந்துவந்தார்கள்.

அப்போது. ஆதீனத்து இளவடியார் கூட்டத்து ஒருவராகிய சம்பந்தசரணாலய சுவாமிகளும், காவை அம்பலவாண சுவாமிகளும் கல்வி கற்கவேண்டும் என்ற விருப்பத்தை இவர்களிடம் தெரிவித்துக்கொள்ள, அவர்களை ஏற்றுத் தம்மைப்போலவே இருமொழிப்புலமையும் எய்துவித்தனர். இவர்கள் மாணாக்க ராகிய சம்பந்த சரணாலயரது கல்விப்பெருமைக்கும், இவர்கள் போதனைத் திறத்திற்கும் தக்கசான்று, பதினாயிரத்து மூந்நூற்று நாற்பத்தாறு பாடல்கள் கொண்ட கந்தபுராணத்தை, ஆயிரத்து நாற்பத்தெட்டுப்பாடல் கொண்ட சுருக்க நூலாக இயற்றியதே யாகும்.

பின்னர், சுவாமிகள் குருமகாசந்நிதானத்தின் உத்தரவுப்படி புள்ளிருக்குவேளூர்க் கட்டளை விசாரணை மேற்கொண்டிருந்த காலத்துத் திருக்கோயில் திருப்பணிகள் பலவற்றைத் திறம்படச் செய்வித்தார்கள். திருவெண்காட்டிலே நடராஜப்பெருமான் திருச்சபையும் இவர்களாலேயே திருத்தியமைக்கப் பெற்றது. இங்ஙனம் சொற்பணியும் கற்பணியும் செய்துகொண்டிருந்த இவர்கள் தொண்டின் திறத்தை யுளத்தடைத்த குருமூர்த்திகள் தக்ஷிணத்திற்குப் போகும் வண்ணம் பணித்தார்கள். அங்ஙனமே சுவாமிகள் திருநெல்வேலிக்குச் சென்று சிந்துபூந்துறையிலுள்ள ஆதீனத் திருமடத்தில் தங்கியிருந்தனர். மணம்பொருந்திய மலரிருந்தால் வண்டுகள் வராதிருக்குமோ! கல்விமணம் நிறைந்த சுவாமிகள் அவண் எழுந்தருளியதும் பல மாணவ வண்டுகள் வந்து பயன்கொள்ளத் தொடங்கின. சுவாமிகள் தென்றமிழும் வடமொழியும் அவர்கட்குக் கற்பித்து எழுந்தருளி யிருக்குங் காலத்து, இவர்கள் இலக்கிய இலக்கணப் போதனைத் திறம் தமிழ்நாடெங்கும் பரவிற்று. கற்பனைக் களஞ்சியம் என்று சிறப்பித்துச் சொல்லப்பெறும் துறைமங்கலம் சிவப்பிரகாச சுவாமிகள் இவர்களுடைய இலக்கண ஆற்றலை -

தொல்காப்பியம் முழுதும் ஐயந்திரிபறப் பாடஞ்சொல்லும் பண்பைக் கேள்வியுற்றுச் சிந்துபூந்துறைக்கு வந்து சுவாமிகளிடம் தம் கருத்தை விண்ணப்பித்துக் கொண்டனர். சுவாமிகளும் சிவப்பிரகாசருடைய இலக்கிய அறிவின் எல்லையைக் காணவிரும்பி 'கு' என்று தொடங்கி 'கு' என முடியும் வெண்பாவொன்று விரைவில் இயற்றுக என ஆணை தந்தனர். ஆணையைச் சிரமேற்றாங்கிய துறைமங்கலம் சிவப்பிரகாசர்,

குடக்கோடு வானெயிறு கொண்டாற்குக் கேழல்
முடக்கோடு முன்னமணி வாற்கு — வடக்கோடு
தேருடையான் தெவ்வுக்குத் தில்லைதோல் மேற்கொள்ளல்
ஊருடையான் என்னும் உலகு.

என்னும் பாடலைப் பாடி முடித்தனர். இதனைக் கேட்டவுடன் சுவாமிகள் திருவுள்ளம் சிவப்பிரகாசர் படைத்த ஒரு சொல்லோவியத்தில் அப்படியே திளைத்து நின்றுவிட்டது. அந்தச் சொல்லோவியம் "வடக்கு ஓடு தேர்" என்பது. இங்ஙனம் கவித்திறத்தைக் கண்ட சுவாமிகள் தொல்காப்பியத்தை ஒரு பக்ஷத்திற்குள் பாடஞ்சொல்லி முடித்தார்கள். கேட்டுத் தெளிந்த சிவப்பிரகாசர் இலக்கிய இலக்கணக் கடலை நிலைகண்டுணர்ந்த ஆசிரியப் பெருந்தகைக்கு யாம் செய்யும் கைம்மாறு என்னே? என்று எண்ணியிருக்கின்றபோது, சுவாமிகள், தம்மாடு கல்விச் செருக்கால் மாறுபட்ட புலவர் ஒருவரைத் தருக்கடக்கி வருக என ஆணை வழங்கினார்கள். சிவப்பிரகாசர் திருச்செந்தூர் முருகனை வழிபடச் சென்றிருந்தனர். அப்போது அந்தப் புலவர் அவண் வழிபட வந்திருந்தார். அவர் இவர்களைப்பற்றித் தெரிந்துகொண்டு ஆசிரியர்க்குத் தாம் வழங்கிவரும் இழிப்புரையைச் சுவாமிகள் மாணாக்கராகிய இவருக்கும் வழங்கினர். உடனே சிவப்பிரகாசர் செந்திலாண்டவன்மேல் நிரோட்டக யமக அந்தாதி பாடி, யார் சிறந்தார் என்பதை நிச்சயித்துக் கொள்வோம் 'விரைந்து முடித்தவர் முடிக்காதவர்க்கு அடிமையாவோம்' என்று ஒட்டிநின்று பாடத் தொடங்கினர். செந்திலாண்டவன் திருவருள் சிவப்பிரகாசர் திருவாயில் செய்யுள் விரைந்து வரத்தூண்டிற்று. செருக்குடைய புலவர் தோற்றார்; அடக்கமுடையவர் வென்றார். உடனே புலவரையழைத்துக்கொண்டு சிந்துபூந்துறையையடைந்து, தமது ஆசிரியப் பெருந்தகை முன் சேர்ப்பித்தார்.

வந்த புலவர், வெறுந்தமிழ்க்கும், தெய்வத்தமிழ்க்கும் உள்ள வேற்றுமையை யுணர்ந்து வெள்ளியம்பலவாணர்க்கு அடிமை யாயினர். சுவாமிகள் "நானோ ஞானசம்பந்தத்தின் அடிமை. ஆதலால் அடிமைக்கு அடிமை வேண்டா" என்று எண்ணி அவருக்குச் சிவஞான நூல்களைச் செப்பமுறக் கற்பித்து ஆதீனத்திற்கு அழைத்துவந்து தமது குருநாதனுடைய திருவரு ளுக்கு இலக்காக்கி ஆதீனத்திற்கு அடிமையாக்கினார்கள்.

பின்னர், சுவாமிகள் தமிழ்நாடெங்கும் சிவமணங்கமழப் பல சாத்திரப் பிரசங்கங்களும், புராணப் பிரசங்கங்களும்செய்து சைவமுந் தமிழும் தழைத்தோங்கச் சிந்துபூந்துறை மடத்திலேயே தங்கியிருந்தார்கள். அப்போது சிதம்பரம் கண்கட்டி மடத்துக் கிளையான அறச்சாலை மடத்து அதிபர்களாலும், அவர்கள் சீடர் களாலும் ஆன்மானந்தவாதமானது பரவிற்று. அதனைக்கண்ட சுவாமிகள் தமது ஞானமுதல்வராகிய குருஞானசம்பந்தர் செய்த முத்திநிச்சயம் என்ற பண்டார சாத்திரத் தலைநூல் பரிபக்குவம் உடையார்க்கு அன்றி எல்லோருக்கும் எளிதில் விளங்கும் இயல்பினதாயில்லாமல், சுருங்கிய இருபத்திரண்டு வெண்பாவில் பல ஆகம சாத்திர தோத்திரக்கருத்துக்களைச் செறித்திருக்கும் சிறப்பினதாயிருப்பதால் அதற்குப் பெரிய தொரு விரிவுரை இயற்றினால் அனைவரும் அறிந்து உய்யக்கூடும் என்று எண்ணி முத்திநிச்சயப்பேருரை ஒன்றை எழுதினார்கள்.

அன்றித், தம் ஆதீனத்திற்கு முதனூலாகிய சிவஞான சித்தியாருக்கும் ஞானாவரணவிளக்கம் என்னும் ஒரு நல்லுரை யும் தந்தார்கள். மற்றும், காமிகத்தின் உபாகமமாகிய மிருகேந்திராகமத்தின் வித்தியாபாதத்தைச் சூத்திர யாப்பால் மொழிபெயர்த்தருளினார்கள். இங்ஙனம் பலவகையிலும் தமிழுல கைப் பண்படுத்திவந்த சுவாமிகள் பரிபூரணம் எய்திய இடம் சிதாகாசமாகிய தில்லையம்பதியாகும். இவர்கள் சமாதி, ஞானப் பிரகாசக்குளத்துத் தென்மேற்கு மூலையில் இருக்கிறது.

இவர்கள் காலம்:- சுவாமிகள் குமரகுருபர சுவாமி களிடம் கல்வி பயின்றவர்கள். குமரகுருபர சுவாமிகள் காலம் 17-ம் நூற்றாண்டின் முற்பகுதி என்று துணியப் பெறுகின்றது. இவர்களுடைய மாணாக்கர் சிவப்பிரகாசர். சிவப்பிரகாசர் பிரபுலிங்கலீலை எழுதிய காலம் கி. பி. 1652

என்று துணியப்பெறுகின்றது. ஆகவே, இந்தச் சுவாமிகள் காலம் 17-ம் நூற்றாண்டின் இடைக்காலமாக இருக்கவேண்டும் என்று துணியப்பெறும்.

சுவாமிகளைத் தமிழுலகமும், சைவ உலகமும் எங்ஙனம் தெரிந்துகொண்டிருக்கின்றன என்பதை ஆராய்தல் இன்றி யமையாததாகும். சுவாமிகள் தம்பாடல்கள் பலவற்றைத் தேவாரத்தினும், பெரியபுராணத்தினும் செறித்து அவைகள் சமயாசாரியர்கள் வாக்கோடு வேற்றுமையின்றி விளங்குதலைக் கண்டு வியந்தனர் என்றும், அதனால் பல பாடல்கள் பெரிய புராணத்தும், தேவாரத்தும் கலந்து விட்டன என்றும் அதனால் அப்பாடல்களை வெள்ளிப்பாடல் என்று வழங்கத் தொடங்கின என்றும் கருதிக்கொண்டிருக்கின்றன.

ஆனால், சுவாமிகளோ தாம் எழுதிய முத்திநிச்சயப் பேருரையில்,

"இவ்வாற்றாற்போந்தது கன்மசித்தாந்த குரவரான சத்தியோசோதி, அகோரசிவாசாரியர், நாராயணகண்டர், ராமகண்டர் முதலியோர் வாய்மொழியினும். ஞானசித்தாந்த குரவரான திருமூலதேவர், மெய்கண்டதேவசிவாசாரியர்' அருணந்திதேவசிவாசாரியர் முதலியோர் வாய்மொழி வலியுடைத்து. அவ்வாய்மொழியினும் பட்டினத்துப்பிள்ளை முதலியோர் வாய்மொழி வலியுடைத்து. அதனினும் சம்பந்த மூர்த்தி முதலிய சமயகுரவர் முதலியோர் வாய்மொழிவலியுடைத்து, அதனினும் உபாகமவசனம் வலியுடைத்து, அதனினும் மூலாகம வசனம் வலியுடைத்தென்பதாம். என்னெனில் சந்தானகுர வருள் கன்மசித்தாந்த குரவரினும் ஞானசிந்தாந்தகுரவர் உயர்ந்தோரென்பது,

कर्मान्त मेवं ज्ञानान्तं ज्ञानमूर्ध्वं मरं स्मृतम् ।

என்பதனானும், அவர்பெரும்பான்மையும் ஞானாதிகாரிகளன்றி யிருத்தலானும் தாம் கற்றறிதலன்றி மெய்கண்ட தேசிகர் முதலான இவர்போல் தெய்வத்தன்மையானுணரும் உணர்வின ரல்லராகலானும் என்க. அவரினும் பட்டினத்துப்பிள்ளை முதலியோர் உயர்ந்தோரென்பது அவர்போற் பரம்பரையா னன்றிச் சிவன்றானேயருளும் தெய்வத்தன்மையானும் பிற

வாற்ருனுமென்க. அவரினும் சமயகுரவர் உயர்ந்தோரென்பது சிவன்றன்ஞனேயருள்பெற்றதே யன்றிச் சமயபரிபாலனம் பண்ணுகையானும் பரமசிவன் எளிதின் எஞ்ஞான்றும் வெளிப் படுதலானும் நிக்கிரகாநுக்கிரகம் உடைமையானும் பிறவாற்ரு னும் என்க. இதனுனேயன்றே சமயாசாரியரைச் சிவாலயத் தும் பூசை செய்வதூஉம் என்க'' —முத்திநிச்-பக்கம் 67-68. என்று சமயாசாரியர்களைப் புகழ்கின்ருர்கள். இங்ஙனம் தம் மாட்டுத் தோன்றிய மெய்ப்பாட்டைப் படிப்பாரும் எய்தும் நிலையில் உரை வகுக்கும் 'உத்தமரா, தம் பாடல்களைச் சிவன் தானேயருளுந் தெய்வத்தன்மைவாய்ந்த சமயாசாரியர்கள் வாக்கோடு இணைத்துப் பார்க்கும் எண்ணமுடையவர் ஆவர் என்பதை எண்ணிப்பார்க்கவேண்டும்.

இதனுல், பொன்னெத்த - போற்றத்தக்க - மங்கா ஒளி யுடைய திருமுறைகளின் இடையிலேயே, வேறு யாரோ ஒரு சமய வரம்பழிக்கும் கல்விப் புலவரால் கலக்கப்பெற்ற பாடல் கள் பொன்னிடைக் கலந்து வெள்ளிபோல விளங்குதலின் வெளிப்பாட்டு என வழங்கிற்று என்று துணிதலே சாலச்சிறந்த தாகும். இதனுல் ஒன்றுமட்டும் துணியக்கூடும்; தமிழுலகம் வெள்ளியம்பலவாணர் வாக்கு திருமுறைகள்போல தெய்வ ஒளி வீசும் தன்மையதாக இருக்கின்றமையை உணர்ந்திருக்கிறது என் பதே. இங்ஙனம் எல்லா வகையினும் சிறந்து விளங்கிய சுவாமி தமிழுலகிற்குச் செய்த நன்றி மிகப் பாராட்டத்தக்கதாகும்.

---

குமரகுருபரன் — ஆண்டுச் சந்தா 3 — 00 —

தருமையாதீனத்து முனிபுங்கவரும், ஸ்ரீ காசி மடத்து முதல்வருமான ஸ்ரீலஸ்ரீ குமரகுருபர சுவாமிகளினுடைய திருப்பெயர் பூண்டு, சமயம், இலக்கியம், அறம் முதலிய வற்றை எளிய நடையில் தெளியச்செய்யும் ஆராய்ச்சி விளக்கத்துடன் ஸ்ரீலஸ்ரீ காசிவாசி சுவாமிகள் அவர்க ளது ஆணையின்வண்ணம் உயரிய இவ்விதழ் வெளிவரு கிறது.

விலாசம் : நிர்வாக ஆசிரியர், உயர்திருவாளர்.

T. M. குமாரகுருபரன் பிள்ளை B. A . B. L., அவர்கள்,

''குமரகுருபரன்'' ஆபீஸ், ஸ்ரீவைகுண்டம்

# செய்திகள்

### தருமையாதீனத்தில்

## ஸ்ரீ ஆனந்தபரவசர் குருபூசை விழா

தருமையாதீனம் இரண்டாவது குருமூர்த்திகளாக விளங்கிய ஸ்ரீலஸ்ரீ ஆனந்தபரவச தேசிக பரமாசாரிய சுவாமிகளின் குருபூசை விழா 19—12—67 அன்று நடைபெற்றது. ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமணி அவர்கள் காலையிலும், மாலையிலும் குருமூர்த்தத்திற்கு எழுந்தருளி வழிபாடு செய்தருளினார்கள். விழாவை யொட்டிப் பெரியபுராணச் சொற்பொழிவுகள் நடைபெற்றன. குருபூசை விழாமலராக சேக்கிழார் புராணம் வெளியிடப் பெற்றது,

### திருக்கடையூரில்

## ஆலயத் தூய்மைப் பரிசளிப்பு விழா

சென்னை இந்து சமய அறநிலய ஆட்சித்துறை மாவட்ட வாரியாக தூய்மையாகப் பேணப்பெறும் ஆலயத்திற்கு சுழற் கோப்பைப் பரிசு வழங்கி வருகிறது. திருச்சி தஞ்சை மாவட்டத்தில் 1966-ஆம் ஆண்டிலும் இரண்டாவது முறையாக தருமையாதீனத்துக்குச் சொந்தமான திருக்கடவூர் ஸ்ரீ அமுதகடேசுவர சுவாமி தேவஸ்தானம் மிகத் தூய்மையோடு விளங்குகிறது என்று தீர்மானிக்கப்பெற்று அதற்குரிய சுழற்கோப்பையைச் சென்னை இந்து சமய அறநிலய ஆட்சித்துறை ஆணையர் திரு. அ. இராதாகிருஷ்ணன் எம். ஏ., பி. எல்., அவர்கள் வழங்கினார்கள். 27—12—67 புதன்கிழமை 9-மணி அளவில் சுழற் கோப்பைப் பரிசளிப்பு விழா நடைபெற்றது, தஞ்சை அறநிலய ஆட்சித்துறைத் துணை ஆணையர் திரு. டி. என். சிங்காரவேலு பி. ஏ., பி. எல்., அவர்களும், நாகை உதவி ஆணையர் திரு. அர்ச்சுனன் அவர்களும மற்றும் பெருமக்கள் பலரும் விழாவிற்கு வருகை புரிந்தனர்.

# வள்ளலார்கோயில் பாவை மாநாடு

தருமையாதீனத் திருக்கோயில்கள் சார்பில் மாயூரம் வள்ளலார்கோயிலில் 26. 27, 28—12—67 ஆகிய மூன்று நாட்களும் பாவை மாநாடு வழக்கம்போல் மிகச்சிறப்பாக நடைபெற்றது. 26—12—67 செவ்வாய்க்கிழமை மாலை வேளூர் தேவஸ்தானம் கட்டளை விசாரணை வித்துவான், ஸ்ரீமத் இராமலிங்கத் தம்பிரான் சுவாமிகள் வரவேற்புரை கூறினார்கள். சென்னை அறநிலைய ஆட்சித்துறை ஆணையர் திரு. A. இராதாகிருஷ்ணன் M. A., B. L.. அவர்கள் தொடக்கவுரை நிகழ்த்தினர். தஞ்சை அறநிலைய ஆட்சித்துறை துணை ஆணையர் திரு T. N. சிங்காரவேல் B. A., B. L. அவர்கள் சிறப்புரை ஆற்றினார்கள், ஆணையர் துணையாணையர் ஆகிய இருவர்க்கும் ஸ்ரீமத் சுவாமிகள் அவர்கள் பொன்னாடைபோர்த்தி வரவேற்றார்கள். திருவாசகமணி, திரு. K. M. பாலசுப்பிரமணியம் B.A., B.L., அவர்கள் 'சீரொருகால் வாயோவாள்'' என்பவை பற்றியும்; திருமதி. செயகுமாரி பாஸ்கரன் அவர்கள் "பாவைப் பண்பு' என்பது பற்றியும் சொற்பொழிவாற்றினர். கணநாதர் நாடக சபையினரின் பொம்மலாட்டம் நடைபெற்றது.

27—12—67 புதன்கிழமை சென்னை திரு. நா. பார்த்தசாரதி அவர்கள் "பாவைபாடிய பாவை'' என்பது பற்றியும், வித்துவான், திருமதி. ப. நீலா அவர்கள் "இருபாவைகள்" பற்றியும் விரிவுரையாற்றினர். தஞ்சை திருமதி. கமலாமூர்த்தி குழுவினரின் கதாகாலக்ஷேபம் நடைபெற்றது.

28—12—67 வியாழக்கிழமை திரு. கோ. சுப்பிரமணிய பிள்ளை B. A., B. L., அவர்கள் "கேழில் விழுப்பொருள்கள்'' என்பது பற்றியும், திரு. ஔவை, து. நடராசன் M. A., அவர்கள் "இன்னம் துயிலுதியோ" என்பது பற்றியும், ஆதீனப் புலவர். திரு. க. வச்சிரவேலு முதலியார் B.A.. L.T., அவர்கள் "மார்கழி நீராடல்'' பற்றியும் விரிவுரை யாற்றினர்.

இரவு 9-மணிக்கு பண்ணிசையுடன் யானைமேல் திருமுறைத் திருவீதியுலா நடைபெற்றது.

# எதிர்காலம் - திரு. K. முத்துஜோதிடர்

( பிலவங்கஞு தைமீ 1௨ முதல் 29௨ முடிய )

(15—1—68 முதல் 12—2—68 முடிய)

ஸ்ரீ சிவபெருமான் திருவருளால் நாளது பிலவங்க வருஷம் மார்கழி மாதம் 30ம் தேதி பானுவாரம் திருவாதிரை நக்ஷத்திரம் 3ம் பாதத்திலும், உதயாதி நாழிகை 30-14க்கு கடக லக்னத்தில் மிதுன புத நவாம்சையில் ஸ்ரீ சூரிய பகவான் மகர ராசிக்கு பிரவேசம் ஆகிருர். தைமாதம் முதல்தேதி சோம வாரம் உதயத்தில் உத்தராயண மகர சங்கிராந்தி புண்ணிய காலம். மேற்படி மகரராசி பிரவேசகால பலமானது நமது பாரத பூமிக்கு சமஸ்த மங்களத்தையும் கொடுக்கும். சகல பிரஜைகளும் ஆரோக்கியத்துடனும் தனதான்ய விருத்திகளுடனும் சுபிக்ஷத்துடன் வாழ்ந்துகொண்டு இருக்க சர்வேச்வரனை உபாசித்து பிரார்த்தித்து எதிர்காலம் சுபிக்ஷகரமாய் இருந்துகொண்டு இருக்க நாம்எல்லோரும் ஸ்ரீ சூரியபகவானை பிரார்த்திப்போமாக.

## 1. மேஷம் - அசுவதி - பரணி - கார்த்திகை ¼

மேஷராசி 9 பாதங்களும் சமஸ்த மங்களத்தையும் தரும். நஷ்டதனம் தானுக வந்துசேரும். ஆரோக்யம் உண்டுபண்ணும், கீர்த்தி பத்திரம் கிடைக்கும். குடும்பம் ஓங்கும். தொழில் மூலம் விசேஷமான லாபம் ஏற்படச்செய்யும். ஞாயிறு திங்கள் சுபமாகும்.

## 2. ரிஷபம் - கார்த்திகை ¾, ரோஹிணி - மிருகசீர்ஷம் ½

ரிஷபராசி 9 பாதங்களும் சுபமேயாகும். நூதன பிரபு தெரிசனமும் ஸ்திர ஜீவனமும் ஆரோக்யமும் உண்டுபண்ணும். சுபசோபனுதிகளும், இல்லற சுகமும் ஓங்கும். ஸ்தாவர ஜங்கம சொத்துக்கள் வந்துசேரும். மனம் சாந்தி அடையும். செவ்வாய், புதன் சுபமாகும்.

**3. மிதுனம் - மிருகசீர்ஷம் ½, திருவாதிரை - புனர்பூசம் ¾**

மிதுனராசி 9 பாதங்களும் மிச்ரமான பலனைத்தரும். மருந்துகள் சாப்பிடுவதால் ஆரோக்யம் உண்டுபண்ணும். இல்லற சுகம் ஓங்கும். வம்சம் விருத்தியர்கும். மேலோர் பெரியோர்களின் உதவியும் கிடைக்கும். தொழில் ஓங்கும். வியாழன். வெள்ளி சுபமாகும்.

**4. கடகம் - புனர்பூசம் ¼, பூசம் - ஆயில்யம்**

கடகராசி 9 பாதங்களும், விசேஷ நன்மைகளை உண்டு பண்ணும். விவசாயம் ஓங்கும், தனதான்ய சமிருத்தி ஏற்படும். வெகுகாலமாய் தீராத வியவகாரம் ஜெயித்து பூர்ணமாக ஜெயத்தை உண்டுபண்ணும். தெய்வபலம் முன் னின்று காக்கும். யக்ஞயாகாதி பலன்களையும் தரும். இல்லற சுகம் ஓங்கும், சனி, ஞாயிறு சுபமாகும்.

**5. சிம்மம் - மகம் - பூரம் - உத்திரம் ¼**

சிம்மராசி 9 பாதங்களும், மிச்சரமான பலனைத்தரும். வரவு செலவு சமனுகும். குடும்ப சுகம் ஓங்கும். மேலோர் பெரியோர்களின் உதவியால் மேல்பதவி கிடைக்கச்செய்யும். ஆரோக்யம் உண்டுபண்ணும். நூதனபிரபு தெரிசனமும் பிரதிஷ்டா பலன்களும் கிடைக்கச்செய்யும். திங்கள், செவ்வாய் சுபமாகும்.

**6. கன்னி - உத்திரம் ¾, ஹஸ்தம், சித்திரை ½**

கன்னியாராசி 9 பாதங்களும், சிவகேசவாதி தெரிசனங் களும் புண்ணிய ஸ்தல யாத்திரையும் உலகபிரசித்தியும், உண்டுபண்ணும். ராஜாங்க மூலமாய் அசாத்யமெல்லாம் சுலப சாத்தியமாகும். ஆரோக்யம் உண்டுபண்ணும், சில நூதன முறைகளால் பரோபகார சிந்தனையும், தானதர்ம பலன்களும், ஏற்படும், புதன், வியாழன் சுபமாகும்.

**7. துலாம் - சித்திரை ½, சுவாதி - விசாகம் ¾**

துலாராசி 9 பாதங்களும், சுபமேயாகும். தொழில் ஓங்கும் எதிர்பாராதபடி, ஸ்தாவர ஜங்கம சொத்துக்கள் வந்துசேரும். ஆரோக்யம் தரும். யக்ஞயாகாதி பலன்களால் தெய்வபலம் ஓங்கும். வெள்ளி, சனி சுபமாகும்.

**8. விருச்சிகம் - விசாகம் - ¼, அனுஷம் - கேட்டை**

விருச்சிகராசி 9 பாதங்களும் மிச்ரமான பலனைத்தரும், இடம் மாறச்செய்யும், குடும்பசுகம் ஓங்கும், ஔஷத

பலத்தால் ஆரோக்கியம் உண்டுபண்ணும், குடும்பத்தில் மங்கள காரியங்கள் நடைபெறும். வரவு செலவு சமனாகும். ஞாயிறு திங்கள் சுபமாகும்.

**9. தனுசு - மூலம் - பூராடம் - உத்திராடம் ¼**

தனுர்ராசி 9 பாதங்களும் சுபமேயாகும், தனதான்ய விருத்தி ஏற்படும், புத்திராதிகளால் சுகம் உண்டாகும், ஆரோக்கியம் தரும், ஸ்தாவர ஜங்கம சொத்துக்கள் கிரய விக்கிரயங்களும் அதன்மூலம் விசேஷலாபமும் தரும். ராஜாங்க மூலம் விசேஷ நன்மை உண்டாகும். செவ்வாய் புதன் சுபமாகும்.

**10. மகரம். உத்திராடம் ¾ - திருவோணம் - அவிட்டம் ½**

மகரராசி 9 பாதங்களும் சுபமேயாகும், ஆரோக்கியம் தரும் கிரஹசுகம் ஓங்கும், மேல்பதவி கிடைக்கும் தான தர்ம புண்ணிய பலன்களால் தெய்வபலம் ஓங்கும், ஸ்திரசுக ஜீவனம் ஏற்படும், மேலோர் பெரியோர் அன்பு கிடைக்கும் வியாழன் வெள்ளி சுபமாகும்.

**11. கும்பம்-அவிட்டம் ½, - சதயம் - பூரட்டாதி ¾.**

கும்பராசி 9 பாதங்களும் மிச்ர பலனைத் தரும், சஞ்சார பலன் கிடைக்கும், நஷ்டமான பொருள் தானாக வந்துசேரும் சத்துருக்களிடமிருந்து ஜெயம் ஏற்படும். ஆரோக்கியம் உண்டாகும் ஸ்தாவர ஜங்கம சொத்துக்கள் சேரும் வரவு செலவு சமனாகும். சனி ஞாயிறு சுபமாகும்.

**12. மீனம். பூரட்டாதி ¼ உத்திரட்டாதி - ரேவதி.**

மீனராசி 9 பாதங்களும் மிச்ரபலனைத் தரும், வரவு செலவு சமனாகும், ஜீவனலாபம் கிடைக்கும், ஆரோக்கியம் தரும், சதா சஞ்சார பலனாகவே இருக்கும், புத்திராதிகளால் சுகம் உண்டாகும், தேவதா பக்தியும் தனதான்ய சமிர்த்தியும், உலகப்பிரசித்தியும், கீர்த்தியும், உண்டாகும். திங்கள் செவ்வாய் சுபமாகும்.

குறிப்பு:- 14—2—68 பன்னிரண்டு ஆண்டுகளுக்கு ஒரு முறைவரும் மஹாமகத்தில், கும்பகோணத்திலுள்ள தேவாலயங்களில் சகல தேவதைகளும் ஸாந்நித்யம் அடைகின்றனர். தேவ காதம் என்ற மகாமகக் குளத்தில் [கங்காமுதலிய ஸகல புண்ணிய தீர்த்தங்களும் ஒன்றுசேர்ந்து இருக்கின்றன. ஆதலின் யாவரும், அக்காலத்தில் ஷெ தீர்த்தத்தில் ஸ்நானம்செய்து சகல இஷ்டசித்திகளையும் அடைவார்களாக.

உ
குருபாதம்

திருக்கயிலாய பரம்பரைத் தருமையாதீனம்

ஸ்ரீ ஞானம்பிகா சமேத ஸ்ரீ ஞானபுரீசுவரசுவாமி கோயில்

# மகோற்சவப் பத்திரிகை

## சிறப்புத்திருநாள் நிகழ்ச்சிகள்

---

8—5—68 புதன்கிழமை துவஜாரோகணம்

12—5—68 ஞாயிற்றுக்கிழமை சகோபுர ரிஷபவாகனக் காட்சி

14—5—68 செவ்வாய்க்கிழமை திருக்கல்யாணம் வெள்ளிரதக்காட்சி

16—5—68 வியாழக்கிழமை திருத்தேர்

17—5—68 வெள்ளிக்கிழமை காவிரியில் பஞ்சமூர்த்திகள் தீர்த்தம் கொடுத்தல் துவஜாவரோகணம்

17—5—68 வெள்ளிக்கிழமை

ஸ்ரீலஸ்ரீ குருஞானசம்பந்த தேசிக பரமாசாரிய சுவாமிகள் குருபூஜை விழா

---

18—5—68 சனிக்கிழமை

ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகாசந்நிதானம் அவர்களின் பட்டணப்பிரவேசம்

8—5—68 முதல் ] [ 18—5—68 முடிய

திருநெறிய தெய்வத்தமிழ் மாநாடு



உ

குருபாதம்

## ஸ்ரீ ஞானம்பிகா சமேத ஸ்ரீ ஞானபுரீஸ்வரசுவாமி கோயில்

# மகோற்சவப் பத்திரிகை

பெருங்கருணைத் தடங்கடலாகிய சிவபெருமான் ஆன்மாக்கள் மீது வைத்த எல்லையிலாப் பெருங்கருணையினாலே, காணாத அருவினுக்கும் உருவினுக்கும் காரணமாய் நிகழ்குறியாம் சிவலிங்கமாதி திருவுருக்கொண்டு எழுந்தருளியிருக்கின்ற தலங்கள் பலவற்றுள் இந்திரன், அகத்தியர், தருமன் ஆகியோர்களால் பூசிக்கப்பெற்றதும், காவிரி முதலிய தீர்த்தங்களால் சிறப்புற்றதும், வில்வாரண்யம் என்னும் சிறப்புத் திருநாமம் உற்றதும், குருபீடஸ்தானமும் ஆகிய தருமபுரத்தின்கண் திருக்கோயில்கொண்டு எழுந்தருளியிருக்கின்ற ஸ்ரீ ஞானம்பிகா சமேத ஸ்ரீ ஞானபுரீசுவரசுவாமிக்கு, நிகழும் கீலக ஆண்டு சித்திரைத்திங்கள் 26ஆம் நாள் (8—5—1968) புதன்கிழமை தொடங்கி மகோற்சவம் நடைபெறும்.

இந்நாட்களில் திருநெறிய தெய்வத் தமிழ் மாநாடு நடைபெறும். சிவநேசச் செல்வர்கள் யாவரும் வந்திருந்து திருவிழாக் காட்சியைத் தினமும் தரிசித்தும் சொற்பொழிவுகளைக் கேட்டும் இன்புறுக.

திருக்கயிலாய பரம்பரைத் தருமையாதீனம்,
கார்பார்
**சொக்கநாதத் தம்பிரான்,**

தருமையாதீன
மடாலயம்
கீலக - சித்திரை

---

ஆதீன மடாலய திருநெறிய தெய்வத் தமிழ்மன்றத்தில் நாள்தோறும் மாலை 6-மணி முதல் மாநாட்டு நிகழ்ச்சிகளும் பூசை மடத்தில் காலை 10-மணி முதல் சித்தாந்தப் பாட வகுப்பும் நடைபெறும்.

# ஆதி பரமாசாரிய மூர்த்திகள் சரிதம்

பாண்டியநாட்டில் ஸ்ரீ வில்லிபுத்தூரில், சைவ வேளாளர் மரபில், ஸ்ரீ சுப்பிரமணிய பிள்ளை மீனாட்சியம்மை என்னும் பெற்றோர்க்கு அரும்பெறற் புதல்வர் ஒருவர் சோமவார சுப தினத்தில் தோன்றினார். பிள்ளைத் திருநாமம் ஞானசம்பந்தர் என்பது. இளமையிலேயே கல்வியில் குறைவில்லாது நிரம்பினார். பெற்றோர் தம் ஆன்மார்த்தமூர்த்தியாம் சொக்கலிங்கத்தை வழிபட மதுரை சென்றபொழுது உடன்சென்ற ஞானசம்பந்தர் 'உண்மை அம்மை அப்பர் அங்கயற்கண்ணியும் ஆலவாய் அரனுமே' என்று சொல்லிப் பெற்றோருடன் ஊர் திரும்ப மறுத்து, மதுரையிலேயே இருந்தார்.

நாள்தோறும் பொற்றாமரைத் தீர்த்தத்தில் மூழ்கிக் காலந்தோறும் சொக்கநாதரை வழிபட்டு வந்தார். பொற்றாமரைத் தீர்த்தக்கரையில் சிவனடியார் பலர் நீராண்ட புரோதாயம் ஆடி தூய வெண்ணீறு துதைந்த பொன்மேனியும் தாழ்வடமும் உடையவர்களாய் நாயகன் சேவடி தைவரும் சிந்தையுடன் அமர்ந்து நைந்துருகும் அன்போடு சிவபூஜைசெய்தனர். அவ்அடியார்களது செயலில் ஒருநாள் ஞானசம்பந்தரது உள்ளம் ஈடுபட, முற்பிறப்பின் பூஜை உணர்வு அவருக்கு மூகிழ்த்தெழுந்தது. ஆலவாய் அப்பனை, ஆன்மார்த்த மூர்த்தியாகப் பூஜிக்க அளவிலா ஆர்வங்கொண்டு அப்பெருமானை வேண்டினார். அப்பெருமான் அவரது கனவில் தோன்றி, 'முற்பிறப்பில் உன்னால் பூஜிக்கப் பெற்றுவந்த நாம், பூஜைப் பெட்டகத்துடன் பொற்றாமரைத் தீர்த்தத்துள் ஈசானத்திக்கில் இருக்கின்றோம்; மூழ்கிப் பெறுக' என்று அருளிச்செய்தார். ஞானசம்பந்தர் அங்ஙனமே மறுநாள் பொற்றாமரைத் தீர்த்தத்தில் மூழ்கி, ஆன்மார்த்த மூர்த்தியைப் பெற்று, ஆனந்தபரவசம் உற்றார். பின், சொக்கநாதர் சந்நிதியில் சென்று, 'பெருமானே, கண்ணுக்கினிய பெருமானாய் என் கரத்தில் வந்த உன்னைப் பூஜிக்கும் நெறியை அருள்புரிய வேண்டும்' என்று வேண்டினார். அன்று இரவு பெருமான் கனவில் தோன்றி, 'திருவாரூர் ஞானப்பிரகாசனிடம் ஞானோபதேசமும், சிவபூஜையும் பெறுக' என்று பணித்தருளி, ஞானப்பிரகாசரது

கனவிலும் சென்று, 'உன்னிடம் வருகின்ற நம் ஞானசம்பந்த னுக்கு விதிப்படி சிவஞானோபதேசம் செய்து சிவபூஜையும் எழுந் தருளப் பண்ணிவைப்பாயாக' என்று சொல்லி மறைந் தருளினார்.

திருவாரூரில் சித்தீச்சரத்தில் தென்முகக் கடவுள் திருமுன்பு சீடரின் வருகையைக் குருமூர்த்தி எதிர்நோக்கியிருந்தார். அரு ளாணையின்படி ஞானசம்பந்தர், கமலையை அடைந்து குருமூர்த்தி யைக் கண்டதும், காந்தம் கண்ட இரும்புபோல் அவர் வசமாகி, சிவதீக்ஷையும், சிவபூஜையும் எய்தினார். அவர் நாள்தோறும் சொக்கலிங்கத்தைப் பூஜித்துப் பாடியதே சொக்கநாத வெண்பா. அவர் செய்த குருஸ்தோத்திரமே ஞானப்பிரகாசமாலை. ஒருநாள், ஞானப்பிரகாசர் பூங்கோயில் வழிபாட்டினை முடித்து மீள்கை யில், கைவிளக்கெடுப்போன் ஆங்கு இல்லாமை கண்டு, ஞான சம்பந்தர் தாமே அப்பணியினை மேற்கொண்டு செல்ல, சிவத் தியான உள்ளத்துடன் செல்லும் குருமூர்த்திகள் இல்லத்தை அணுகியபொழுது, 'நிற்க' என்று சொல்லி உட்சென்றார். குருவாணை கடவாத ஞானசம்பந்தர், கைவிளக்கோடு வெளி யிலே நின்றிருந்தார். மழை வந்தது; ஓர் அடியும் அப்புறம் பெயர்ந்திலர். மழை அவருக்கு மூன்றடி அப்பாற் சூழ்ந்தே பெய்தது. மறுநாட் காலையில் குருபத்தினியார் கண்டார்; குருமூர்த்தியும் கேட்டுவந்து, 'நீர் குவலயத்திற்கு உண்மை விளக்கும் குருவாயினீர்; தனி இடத்தில் இருந்து உம்மை நாடி ஓடி வரும் காரணர்க்கு உண்மை வைத்து சமய பரிபாலனம் புரிக' என்றார். சீடர்,

"கனக்கும் பொதிக்கும் எருதுக்கும் தன்னிச்சை கண்டதுண்டோ?
எனக்கும் உடற்கும் எனதிச்சையோ? இணங் கார்புரத்தைச்
சினக்கும் கமலையுள் ஞானப்ர காச சிதம்பரஇன்று
உனக்கிச்சை எப்படி? அப்படி ஆக உரைத்தருளே"

என்று வேண்டினார். அதுகேட்டுக் குருமூர்த்திகள், 'தருமபுரம் செல்க' எனப்பணித்தருளினார்.

ஞானசம்பந்தர் அன்றுமுதல் குருஞானசம்பந்தராகித் தருமபுரத்தை அடைந்து சமய பரிபாலனம் புரிந்தார்; ஞான நூல்கள் பல அருளினார்; ஆனந்தபரவசர் முதலிய பலர்வழி ஞானபரம்பரையை உலகில் நிலவச்செய்தருளினார். அவரே தருமபுர ஆதீன ஞானபீடத்தின் ஆதி பரமாசாரிய மூர்த்திகள்.

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

குருபாதம்

## சிவபெருமான்

சீர்கொண்ட ஆனந்தமாகி எங்கும்
செறிவாகிப் பரமாகித் திறம தாகி
ஏர்கொண்ட கருணைத்திரு வுருவ மாகி
எழில்கொண்ட மலைமகளை இடத்திற் கொண்டோன்
கார்கொண்ட நிறங்கொண்ட முகுந்த னுதிக்
கடவுளர்வந் தடிபரவும் கடவுள் கொன்றைத்
தார்கொண்ட முடியனவன் அடியைத்தாழ்ந்து
தாழாத பெருங்கதியில் வாழா நிற்பாம்.

## தருமையாதீனக் குருமுதல்வர்
## ஸ்ரீலஸ்ரீ குருஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள்

சீரணியும் நுதலின்விழி மழுமான் நாகம்
திருந்தும்எரி பொருந்துவிடம் தெரிந்திடாமல்
தாரணி அன்பரையாள அவர்போல் வந்த
சைவசிகா மணிஎவர்க்கும் தலைவன் எங்கோன்
காரணியும் நெடியபொழிற் கமலை வேந்தன்
கருணைமழை பொழியும்இரு கடைக்க ணுளன்
பார்புகழும் ஞானசம் பந்தன் எந்தை
பரமன்இரு சரணமலர் பரவி வாழ்வாம்.

(சம்பந்த சரணலயர்)

# திருநாள் விபரம்

| தமிழ் ஞுல மீ உ | இங்கிலீஷ் ஞுல மீ உ | வாரம் | திரு நாள் | உற்சவ விபரம் |
|---|---|---|---|---|
| சித்திரை மீ 25 | 7—5—68 | மங்களவாரம் | | காலை கணபதி ஹோமம். பூர நக்ஷத்திரம் கூடிய சுபதினத்தில் உதயாதி 31-47 நாழிகைக்கு மேல் 36-52 நாழிகைக்குள் (மாலை மணி 6-35 to இரவு 8-10) விருச்சிகலக்னத்தில் அனுக்ஞை விக்னேசுவரபூஜை வாஸ்துசாந்தி மிருத்ஸங்கிரஹணம், அங்குரார்ப்பணம், ரக்ஷாபந்தனம். |
| 26 | 8—5—68 | புதவாரம் | 1 | உத்திர நக்ஷத்திரம் கூடிய சுபதினத்தில் உதயாதி 8-53 நாழிகைக்குமேல் 10-13 நாழிகைக்குள் (காலை மணி 9-40 to 10-5) மிதுன லக்னத்தில் ஸ்ரீ ஞானம்பிகா சமேத ஸ்ரீ ஞானபுரீஸ்வர சுவாமி மஹோத்ஸவ துவஜாரோகணம். |
| 27 | 9—5—68 | குருவாரம் | 2 | கற்பகவிருக்ஷக் காட்சி. |
| 28 | 10—5—68 | சுக்ரவாரம் | 3 | பூதம், பூதகி, இடும்ப வாகனக்காட்சி. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| சித்திரை | 29 | 11—5—68 | ஸ்திரவாரம் | 4 | நந்தி, காமதேனு, குதிரைவாகனக்காட்சி. |
| | 30 | 12—5—68 | பானுவாரம் | 5 | சகோபுர ரிஷப வாகனக்காட்சி. |
| | 31 | 13—5—68 | சோமவாரம் | 6 | யானை, அன்னம், ஆட்டுக்கடா வாகனக்காட்சி. |
| | 1 | 14—5—68 | மங்களவாரம் | 7 | இரவு மணி 8-30 க்கு மேல் தனுர் லக்னத்தில் திருக்கல்யாண வைபவம், புஷ்ப விமானம், வெள்ளிரதக் காட்சி. |
| | 2 | 15—5—68 | புதவாரம் | 8 | குதிரை, கிளி, யானை வாகனக்காட்சி. |
| | 3 | 16—5—68 | குருவாரம் | 9 | உதயத்திற்குமுன் (மணி 4.30 to 5.30) மேஷ லக்னத்தில் மஹாரதாரோகணம். திருத்தேர். |
| வைகாசி | 4 | 17—5—68 | சுக்ரவாரம் | 10 | காலை ஸ்ரீ சபாநாயகர் தீர்த்தம் கொடுத்தருளல். பிறகு பஞ்சமூர்த்திகளும் ரிஷபாரூடராய் எழுந்தருளிக் காவிரியில் தீர்த்தங் கொடுத்தருளல். இரவு துவஜாவரோஹணம். |
| | 5 | 18—5—68 | ஸ்திரவாரம் | | மௌன உற்சவம். |
| | 6 | 19—5—68 | பானுவாரம் | | சண்டேசுரர் உற்சவம். |

உ

குருபாதம்

# சித்தாந்தப் பாட வகுப்பு

## "சிவப்பிரகாசம்"

8—5—68 முதல் 17—5—68 முடிய

காலை 10 மணி முதல் 12 மணி வரை நடைபெறும்.

நடத்துபவர் :-

தருமையாதீனப்புலவர், சித்தாந்தக்கலைமணி,
மகாவித்துவான்,

**திரு. சி. அருணைவடிவேல் முதலியார்**

பேராசிரியர்,
தருமையாதீனப் பல்கலைக் கல்லூரி.

# திருநெறிய தெய்வத் தமிழ்மாநாடு

ஒவ்வொருநாளும் மாலை 6 மணி முதல் நடைபெறும்.

8—5—68 புதன்கிழமை

## கருத்தரங்கம்

பொருள் :- திருக்குறள்

தலைமையுரை :-

திருவண்ணாமலை ஆதீனம் மகாசந்நிதானம்
**ஸ்ரீலஸ்ரீ தெய்வசிகாமணி அருணாசல தேசிக பரமாசாரிய சுவாமிகள்**
(குன்றக்குடி அடிகளார்)

தொடக்கவுரை :-

முத்தமிழ்க்காவலர்,
**திரு. கி. ஆ. பெ. விசுவநாதன்,**
திருச்சி.

சொற்பொழிவு :-

செந்தமிழ்ச் செல்வர்,
**வித்துவான், திரு, கி. வா. ஜகந்நாதன், M. A.,**
சென்னை.

"மெய்யறிவியல்"

**திரு. ஔவை. துரை. நடராஜன், M. A., M. Litt,**
சென்னை.

"வாழ்வியல்"

**திரு. தி. வ. காந்திமதிநாதன், M. A.,**
மாயூரம்.

"ஆட்சியியல்"

9—5—68 வியாழக்கிழமை

## பட்டிமன்றம்

போருள் :- சிலப்பதிகாரம்

தலைவர் :-

சிலம்புச்செல்வர்.
**திரு. ம. பொ, சிவஞானக்கிராமணியார். M. L. A.,**
சென்னை.

| அற நூல் ? | இலக்கிய நூல் ? |
|---|---|
| செந்தமிழ்ச்செல்வர், **திரு. கி. வா. ஜகந்நாதன், M. A..** சென்னை. | சிலம்புச்செல்வன், **திரு. கா. செல்லப்பன், M. A..** திருச்சி. |
| **திரு. ஔவை. துரை. நடராஜன்,** M. A. M. Litt. சென்னை. | வித்துவான், **திரு. சொ. சிங்காரவேலன்,** M. A, Dip-Ling., தருமபுரம். |
| வித்துவான், **திரு. நா. பார்த்தசாரதி.** சென்னை, | வித்துவான், **திரு. இரா. செல்வக்கணபதி,** சென்னை. |

10—5—68 வெள்ளிக்கிழமை

## கவியரங்கம்

போருள் :- **திருமுறைவளங்கள்**

தலைவர் ;-

திருவாசகமணி,
**திரு. K. M. பாலசுப்பிரமணியம், B. A., B. L.,**
திருச்சி.

கவிதை :-

**திரு. மு. அண்ணாமலை, M. A., M. Litt.**
அண்ணாமலைநகர்.

" கலைவளம் "

**வித்துவான். திரு, தா. ம. வெள்ளைவாரணம்**
திருப்பனந்தாள்.

" பக்திவளம் "

சித்தாந்தப்புலவர்மணி,
**திரு. ந. இரா. முருகவேள், M. A., M. O. L.,**
சென்னை.

" பண்புவளம் "

தருமையாதீனப்புலவர்,
**மகாவித்துவான். திரு. சி. அருணைவடிவேல் முதலியார்,**
தருமபுரம்.

" அருள்வளம் "

11—5—68 சனிக்கிழமை

## கருத்தரங்கம்

பொருள் :- **கம்பராமாயணம்**

தலைவர் :-

**திரு. சா. கணேசன், M. L. C.,**
காரைக்குடி.

சொற்பொழிவு :-

**திரு V. K. C. நடராஜன் I. A. S.**
சென்னை.

" வீரச்சுவை "

திரு. இரா. இராதாகிருஷ்ணன் M. A.,
திருச்சி.

"பக்திச் சுவை"

திருமதி. இராஜேஸ்வரி நடராஜன், B. A.,
சென்னை.

"இன்பச் சுவை"

வித்துவான். திரு. அ. நடேச முதலியார்,
அண்ணாமலைநகர்.

"இலக்கியச் சுவை"

12—5—68 ஞாயிற்றுக்கிழமை

பட்டிமன்றம்

பொருள் :- பாரதப் போரில் நீதி

தொடக்கவுரை :-

திரு. P. G. கருத்திருமன், B. Sc., M. L. A., சென்னை.

நடுவர் ;-

முத்தமிழ்ப் பெருஞ்சொற்கொண்டல்.
புரிசை, திரு. முருகேச முதலியார்,
திருவண்ணாமலை.

| பாண்டவர் பக்கம் ? | கௌரவர் பக்கம் ? |
|---|---|
| திரு. S. சத்தியசீலன், M. A., கைலாசபுரம். திருச்சி. | திரு. அ. கலியபெருமாள் M. A., மாயூரம். |
| திரு. K. அரங்காசாரியார் M. A., B. T., சீகாழி. | திரு. சு. சாமிஐயா M. A., அண்ணாமலைநகர். |
| திரு. T. V. கோபாலன் M. A., திருவையாறு. | வித்துவான். திருமதி. ப. நீலா, தருமபுரம். |

13—5—68 திங்கட்கிழமை

## கவியரங்கம்

### பொருள் :- தமிழ் மொழிச் சிறப்புக்கள்

தலைவர் ;-

திரு. M. R. பெருமாள் முதலியார் M. A.,
சென்னை.

கவிதை :

திரு. அ. வெ. ரா. கிருஷ்ணசாமி ரெட்டியார்
திருச்சி.

" தொன்மை "

திரு. முடியரசன்
காரைக்குடி.

" செம்மை "

புலவர். திரு. ப. அரங்கசாமி
லால்குடி.

" வளமை "

வித்துவான். திரு. ச. குமாரஅழகப்பன்
சென்னை.

" பெருமை "

14—5—68 செவ்வாய்க்கிழமை

## கருத்தரங்கம்

### பொருள் :- மொழி நிறைவிற்கு வேண்டுவன

தலைவர் ;-

பன்மொழிப்புலவர்,
திரு. கா. அப்பாத்துரை M. A., M. Litt.,
சென்னை.

சொற்பொழிவு :-

திரு. ம. ப பெரியசாமித்தூரன்,
சென்னை.

" கலைச் சொற்கள் "

**டாக்டர், திரு. சி. இலக்குவனர்** M. A., M, O. L., Phd.,
சென்னை.
" இலக்கியம் "

**வித்துவான். திரு. சொ. சிங்காரவேலன்** M. A., Dip-Ling.
தருமபுரம்.
" மொழி பெயர்ப்பு "

15—5—68 புதன்கிழமை

## சேரர் திருநாள்

**வித்துவான். ஸ்ரீமத். மகாலிங்கத் தம்பிரான் சுவாமிகள்**
தருமையாதீனம்.
" திருமுகப்பாசுரம் "

தருமையாதீனப்புலவர், சித்தாந்தக் கலைச்செல்வர்.
**திரு. க. வச்சிரவேல் முதலியார்** B. A., L. T.,
காஞ்சிபுரம்.
" சேரமான்பெருமாள் "

**வித்துவான். திரு. வி. சா. குருசாமி தேசிகர்,**
தருமபுரம்.
" சேரன் செங்குட்டுவன் "

**திரைப்படக்காட்சி :- " ஆறுபடை வீடு "**
தமிழ்நாடு தெய்விகப்பேரவை.

16—5—68 வியாழக்கிழமை

## பல்லவர் திருநாள்

**வித்துவான், ஸ்ரீமத். சுவாமிநாதத் தம்பிரான் சுவாமிகள்**
தருமையாதீனம்.
" நரசிம்மவர்மன் "

**திரு. பு. ர. சுவாமிநாதன்** M. A., L. T.,
சிதம்பரம்.
" மகேந்திரவர்மன் "

**வித்துவான், திரு. க. வெள்ளைவாரணனர்,**
அண்ணமலைநகர்.
" பல்லவர் சமயப்பணி "

**திரைப்படக்காட்சி :- " இமயயாத்திரை "**
தமிழ்நாடு தெய்விகப்பேரவை.

17—5—68 வெள்ளிக்கிழமை

## பாண்டியர் திருநாள்

காலையில்:

## சித்தாந்தப் பாடவகுப்பு நிறைவு

**வித்துவான். ஸ்ரீமத். இராமலிங்கத் தம்பிரான் சுவாமிகள்**
தருமையாதீனம்.

" வரகுணபாண்டியன் "

தருமை ஆதீனப் புலவர்,
**மகாவித்துவான், திரு. ச. தண்டபாணி தேசிகர்,**
மாயூரம்.

" நின்றசீர் நெடுமாறன் "

பைந்தமிழ்ச்செம்மல்,
**வித்துவான், திரு. கு. அருணாசலக்கவுண்டர்,**
திருநெல்வேலி.

" பராக்கிரம பாண்டியன் "

**சிரோமணி. வித்துவான். திரு. வி. சபேசன்,**
தருமபுரம்.

" பாண்டியர் சமயப்பணி "

திரைப்படக்காட்சி:- **" மாமல்லபுரம் "**
தமிழ்நாடு தெய்கவிப்பேரவை.

17—5—68 வெள்ளிக்கிழமை

ஸ்ரீலஸ்ரீ குருஞானசம்பந்த தேசிக பரமாசாரிய
சுவாமிகள்

## குருபூஜை விழா

காலையில்

## ஸ்ரீ சொக்கலிங்கப்பெருமானை வழிபடுதல்

விழா மலர் :

## ஸ்ரீ குருஞானசம்பந்தர் வரலாறும் அருள் நூல்களும்

மாலையில்

கனகாபிஷேகம் கொண்டருளிய

**ஸ்ரீலஸ்ரீ கயிலைக்குருமகாசந்நிதானம் அவர்கள்**

காவிரித் திருமஞ்சனத்திற்கு எழுந்தருளிக் குருமூர்த்த வழிபாடு செய்தருளல்.

18—5—68 சனிக்கிழமை

## சோழர் திருநாள்

காலையில் :

தலைவர் :-

திரு. ஆ. இராதாகிருஷ்ணன், M. A. B. L.
இந்து சமய அறநிலையத்துறை ஆணையர், சென்னை.

வித்துவான், ஸ்ரீமத். சோமசுந்தரத் தம்பிரான் சுவாமிகள்

" அநபாயன் "

தருமையாதீனப்புலவர்,
வித்துவான். திரு. ஔவை. சு. துரைசாமிப் பிள்ளை,
மதுரை.

" சோழர் சமயப்பணி "

மாலையில் ;

தலைவர் :-

கனம். திரு. என். கிருஷ்ணசாமி ரெட்டியார், B. A., B. L.,
உயர்நீதிமன்ற நீதிபதி, சென்னை.

திருக்குறள்வேள்,
திரு. ஜி. வரதராஜ பிள்ளை B. A.,
திருச்சி.

"வளவர் கோமான்"

சிவநெறிச்செல்வர்,
வித்துவான், திரு. கே. எம். வேங்கடராமையா M. A.,
திருப்பனந்தாள்.

"இராஜராஜன்"

18—5—68 சனிக்கிழமை

காலையில்

ஸ்ரீ சொக்கலிங்கப்பெருமானை வழிபடுதல்

நண்பகல்

## மாகேஸ்வர பூஜை

மாலையில் :

## இன்னிசை

அண்ணாமலைப் பல்கலைக்கழக இசைக்கல்லூரி முதல்வர்,
தருமையாதீன இசைப்புலவர், திருமுறைக்கலாநிதி, இசையரசு
திரு. எம். எம். தண்டபாணி தேசிகர் குழுவினர்

இரவு :

பட்டணப்பிரவேசம்